'தமிழன்' பத்திரிகை
வீடுகளுக்கு
நேரடியாக
விநியோகிக்கப்படும்.
QR ஐ ஸ்கேன் செய்து
தகவல்களை
பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 239 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை
(24.05.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 03, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## வறிய நாடுகளின் பட்டியலில் இலங்கை

**த. யுவராஜ்**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஆசியாவின் 20 வறிய நாடுகளில் இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளதாக 'யாஹூ பினான்ஸ்' இணையத்தளம் அறிக்கையிட்டுள்ளது.

இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடாக அறிமுகப் படுத்தப்பட்டாலும் ஆசியாவின் 20 வறிய நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாக யாஹூ பினான்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

02 பக்கம்

# எம்.பிக்களுக்கு சத்திய சோதனை!

## மனசாட்சியின்படி வாக்களிக்கக் கோருகிறார் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக

**நா. தினுஷா**

பாராளுமன்றத்தில் தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மீது இன்று இடம்பெறவுள்ள வாக்கெடுப்பின்போது மனசாட்சியின்படி வாக்களிக்குமாறு கோரியுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, ஒருவேளை பதவியிலிருந்து நீக்கப்பட்டால் கட்சிகளில் இணையாமல் அர்ப்பணிப்புடன் அரசியலில் ஈடுபடப்போவதாக தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (23) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் என்மீது முன்வைக்கப் பட்டுள்ள பிரேரணை, நம்பிக்கையில்லாப் பிரேரணை இல்லை. சுயாதீன ஆணைக்குழுவொன்றை அரசியல்மயமாக்கி மின், நீர் மற்றும் எரிபொருள் என்பவற்றை நிர்வகிப்பதற்கான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இது, நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தீர்மானமிக்க சந்தர்ப்பமாகும். ஆகவே, 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன் என்றார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

02 பக்கம்



படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்



தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்று மாறு கோரி நேற்று (23) போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை பொலிஸார் பலவந்தமாக அங்கிருந்து அகற்றினர். (யாழ். செய்தியாளர்)

# சமாதானத்தைப் பேண ஆயுதம் தாங்கிய படை

## ஜனாதிபதியினால் விசேட கட்டளை பிறப்பிப்பு

நாட்டின் சமாதானத்தை பேணுவதற்காக ஆயுதம் தாங்கிய படைகளுக்கு அழைப்பு விடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த கட்டளையானது, பாராளுமன்ற அமர்வுகள் நேற்று (23) ஆரம்பமான போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவால் அறிவிக்கப்பட்டது.

02 பக்கம்

## ஜனக நீக்கப்படுவாரா?

# பாராளுமன்றத்தில் இன்று வாக்கெடுப்பு

**நா. தினுஷா**

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவிநீக்கம் செய்வது குறித்து ஆளும், எதிர்த்தரப்புகள் மத்தியில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், அது தொடர்பிலான.. 02 பக்கம்

# புகையிரத பாதை அமைப்புக்கு இடையூறு ஏற்படுத்தும் தரப்பினர்

## தாமதமானால் இந்தியாவுக்கு நிதி செலுத்தவேண்டிவரும் என்கிறார் பந்துல

**நா. தினுஷா**

அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரையிலான புகையிரதப் பாதையை அமைப்பதற்கு இந்திய நிறுவனம் ஒன்று செயற்பட்டு வருகிறது. எனினும், ஒருசில தரப்பினர் அதற்கு இடையூறு விளைவித்து வருகிறார்கள். ஐந்து மாதங்களுக்குள் திருத்தப்பணிகளை பூர்த்தி செய்யவில்லையெனின் இந்தியாவுக்கு நிதி செலுத்த வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

02 பக்கம்

# மூன்றரை கிலோ தங்கத்துடன் சிக்கினார் அலி சப்ரி எம்.பி.

## விமான நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை



சட்டவிரோதமான முறையில் தங்கத்தை நாட்டுக்கு கொண்டுவந்த குற்றச்சாட்டில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் நேற்று (23) தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

02 பக்கம்



## உஷ்

ஜனாதிபதி தேர்தல் இவ்வருட இறுதியில் நடக்கவுள்ளதாம்.

இதற்கான அரசியலமைப்பு திருத்த ஏற்பாடுகள் விரைவில் நடக்கவுள்ளதாக தகவல்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் செப்டெம்பரில் கிடைத்த பின்னர், மக்களுக்கு நிவாரணங்களை வாரி வழங்கி, அதன்பின்னர் தேர்தலுக்குச் செல்வது ரணிலின் திட்டமாம்.

# கனேடிய பிரதமரால் பாரிய அவமதிப்பு

## அந்நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலையும் நினைவுகூரப்பட வேண்டுமென்கிறார் விமல்



**நா. தினுஷா**

இலங்கையில் மே 18ஆம் திகதியை இனப்படுகொலை தினமாக அறிவித்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இலங்கைக்கு பாரிய அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அதற்கு பதிலாக, கனடா நாட்டின் தேசிய பழங்குடி மக்கள் தினமான ஜூன் 21ஆம் திகதியை கனேடிய இனப்படுகொலை தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்பதுடன் அதற்கு சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் உத்தர லங்கா சபாவின் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

பாராளுமன்ற விவாதத்தில் நேற்று (23) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

மக்களுக்கு நிவாரணம் கொடுக்க ஜனக ரத்நாயக்க குரல் கொடுத்தவர்தானே.... அப்படியெண்டா எப்படி அரசியல்வாதிகள் அவரை ஆதரிப்பாங்கள் என்னங்கோ..?



# எரிச்சலூட்டும் கருத்துகளை வெளியிடும் சமூக ஊடகங்கள்

## சட்டநடவடிக்கை குறித்து ஆராய பாராளுமன்றில் விசேட கலந்துரையாடல்

**நா. தினுஷா**

சமூக வலைத்தளங்களில் வெளிடப்படும் எரிச்சலூட்டும் கருத்துகள் தொடர்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விசேட கலந்துரையாடலொன்றை நடத்த எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (23) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நபர்களின் தனியுரிமையை பாதிக்கும் அவர்களின் வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் முன்னெடுக்கப்படும் அசாதாரண மற்றும் வைராக்கியமூட்டும் சமய, தேசிய, சமூக கலாசார ரீதியாக சமூகத்தில் எரிச்சலூட்டும் கருத்துகளை பரப்பும் சமூக ஊடகங்கள் தொடர்பில், முறைப்பாடுகள் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அதுதொடர்பில் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க பாதுகாப்புத்துறைகளில் தனியாக பிரிவுகள் இருக்கின்றன.

02 பக்கம்



# நினைத்த மாத்திரத்தில் சர்வதேச ஒப்பந்தங்களை மாற்ற முடியாது

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

நா. தினுஷா

சர்வதேசத்துடனான இருதரப்பு ஒப்பந்தங்களை முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் பாராளுமன்றத்தை மீறி திருத்தவோ அல்லது இரத்து செய்யவோ முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது அறிவித்துள்ளார்.

ஒப்பந்தமொன்றை இரத்துச் செய்தல் அல்லது திருத்துவதாயின் அதுதொடர்பில் பாராளுமன்றத்துக்கு யோசனையொன்றை முன்வைக்க வேண்டும் என்பதுடன் அனுமதி கிடைக்காவிட்டால் அவ்வாறான ஒப்பந்தங்களை தன்னிச்சையாக எவராலும் திருத்தவோ இரத்துச் செய்யவோ முடியாது என ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் இந்த யோசனைக்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (23) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகாவலி வேலைத்திட்டம் பொருளாதார ரீதியாக பெரும் வருவாயை உழைத்துக் கொடுத்தது. ஆனால், மகாவலி வேலைத்திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்ட ஏனைய வேலைத்திட்டங்கள் குறித்து தெளிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒருசில வேலைத்திட்டங்கள் திடீரென நிறுத்தப்பட்டன. உதாரணமாக குறிப்பிடுவதானால், அவிசாவளை முதல் கொழும்பு வரையில் மின்சார புகையிரதம் தொடர்பான யோசனை திடீரென ஜனாதிபதியினால் நிறுத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியினால் கிடைக்கவிருந்த இந்த வேலைத்திட்டம் எமக்கு கிடைக்காமல் போயுள்ளது.

இவ்வாறான நிலைமையில், அரசாங்கம் என்ற அடிப்படையில் சர்வதேசத்துடன் ஏதாவதொரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தால் அதற்கான உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, ஏதாவதொரு முறையில் அந்த ஒப்பந்தத்தை திருத்துவதாயின் மீண்டும் பாராளுமன்றத்தில் அனுமதியின்றி கைச்சாத்திடுவதை தவிர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது குறிப்பிட்டார்.

ஆகவே, வெளிநாடுகள் அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் பாரியளவான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு உயர்ந்தபட்ச நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். அதனால், இரு நாடுகளுக்கிடையில் வேலைத்திட்டம் தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் பட்சத்தில், அந்த ஒப்பந்தத்தை நினைத்தவுடன் மாற்றியமைக்க முடியாது என்றும், பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அவ்வாறான ஒப்பந்தங்களை திருத்தியமைக்க முடியாது என்றும் ஜனாதிபதி தெளிவாக குறிப்பிட்டார்.

முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மற்றும் பாராளுமன்றத்தின் அனுமதியின்றியும் ஒப்பந்தங்களை தன்னிச்சையாக திருத்தவோ இடைநிறுத்தவோ முடியாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கை அகதிகள் மூவர் வாகன விபத்தில் உயிரிழப்பு



இலங்கை அகதிகள் மூவர் தமிழகத்தின் திருவள்ளூரில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி பகுதியிலுள்ள இலங்கை அகதிமுகாமில் வசித்துவந்த மூவர் சென்ற மோட்டார் சைக்கிள் லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கும்மிடிபூண்டி அகதிமுகாமில் வசித்துவந்த தயாளன் (வயது 19), சார்ள்ஸ் (வயது 21) மற்றும் ஜோன் (வயது 20) ஆகிய மூவரும் ஞாயிற்றுக்கிழமை(21) இரவு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் மூவரும் கும்மிடிபூண்டி பகுதியில் பெயின்டராக தொழில்புரிந்து வந்தனர்.

விபத்தின்போது சார்ள்ஸ் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்செல்ல தயாளனும் ஜோனும் பின்னால் அமர்ந்து சென்றுள்ளனர்.

சென்னை-கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கும்மிடிப்பூண்டிலுள்ள பெத்திகுப்பம் கிராமம் அருகே இரவு 9 மணியளவில், மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற சார்ள்ஸின் கட்டுப் பாட்டை இழந்து எதிரே வந்த லொறியொன்றின் மீது மோதியுள்ளது.

இந்த காட்சியை மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் ஒருவர் தமது கையடக்க தொலைபேசியில் வீடியோவாக பதிவு செய்துள்ளார்.

விபத்தையடுத்து அவ்வழியாக சென்றோர் பொலிஸாருக்கு தகவலளித்துள்ளதுடன், மூவரையும் மீட்டு அருகிலுள்ள வைத்திய சாலையில் சேர்த்த நிலையில் அவர்கள் மூவரும் வரும் வழியிலேயே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து கும்மிடிப்பூண்டி பொலிஸார் உயிரிழந்தோரின் உடல்களை பிரேத பரிசோதனைக் காக பொன்னேரி அரச வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# அதிசொகுசு வாகன இறக்குமதியை ஐந்து ஆண்டுகளுக்கு இடைநிறுத்துக

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சபையில் கோரிக்கை

கே. சுபானி

நாட்டின் நிதி நெருக்கடிக்கான தீர்வு கிட்டும்வரை அதிசொகுசு வாகன இறக்குமதியை ஐந்து ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்கும்படி முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்ரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு நாட்டில் தற்போது போதுமானளவு வாகனங்கள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) இடம்பெற்ற துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரிச் சட்டத்தின் கீழுள்ள உத்தரவு உட்பட வரி உத்தரவுகள் மீதான விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தற்போது மதுபானம், போதைப்பொருளின்றி உடல்நடுங்கும் சிறுவர்கள் நாட்டில் உள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் வியாபாரிகளால், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அச்சுறுத்தப்பட்டுள்ளதாக செய்தி கிடைக்கப்பெற்றுள்ளது. என்னை கொல்வதற்கு போதைப்பொருள் பாவனையாளர்கள் அன்று பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அப்போது அவ்வாறான போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு மரணதண்டனை விதித்திருந்தேன்.

மதுபானம் மற்றும் சிகரெட் உள்ளிட்ட பொருட்கள் மீதான வரியை அதிகரிப்பது நல்லது. போதைப்பொருள் தடுப்பு தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும். பாடசாலை மாணவர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து மீட்க வேண்டும். நாட்டில் தற்போது மதுபானம் மற்றும் போதைப்பொருளின்றி உடல்நடுங்கும் சிறுவர்கள் உள்ளனர்.

மேலும், அதிசொகுசு வாகன இறக்குமதியை ஐந்து வருடங்களுக்கு இடைநிறுத்தவேண்டும். நாட்டில் தற்போது போதுமானளவு வாகனங்கள் உள்ளன. அதிசொகுசு வாகன இறக்குமதிக்காக அதிக அந்நிய செலாவணி செலவிடப்படுகிறது. அந்நிய செலவாணி கையிருப்பு வீழ்ச்சிக்கு இதுவே காரணம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்த அரச சேவையாளர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாக கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. அவர்கள் தற்கொலை செய்துகொள்ளக்கூடிய சூழ்நிலை வரலாம். ஆகவே, இவ்விடயம் தொடர்பில் அரசு கவனம் செலுத்தவேண்டும்.

விமானநிலைய அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அரசு இதுதொடர்பில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வேலைத்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்ள என்றார்.

# ஐ.தே.க. கொழும்பு மேற்கு அமைப்பாளராக சாகல



ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மேற்கு தொகுதியின் புதிய அமைப்பாளராக சாகல ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அக்கட்சியின் மேற்கு தொகுதிக் கூட்டம் கொழும்பில் நேற்று நடைபெற்றது. அங்கு சபை உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவில் ஜனாதிபதி பணிக் குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க பிரதான அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

# பல்கலை மாணவர் மீது கண்ணீர் புகைப் பிரயோகம்




பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் போராட்டத்தின் போது பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கதலைமையகத்துக்கு முன்பாக நேற்று (23) பிற்பகல் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அங்கிருந்து மாணவர்கள் கண்டி நகரம் வரை முன்னெடுக்க தீர்மானித்திருந்த பேரணியை கலைக்க பேராதனை வைத்தியசாலை அருகில் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். இதன்போது, பேரணியைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மாணவர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்துமாறு கோரியே இந்த எதிர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

### எம்.பிக்களுக்கு....

தங்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தது பொதுமக்கள் என்பதை அனைத்து உறுப்பினர்களும் நினைவில் கொள்ளவேண்டும். அவ்வாறெனில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களுக்காகவே குரல்கொடுக்கிறது. மக்களுக்காக குரல்கொடுக்கும் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மைக்கு அச்சுறுத்தல் விடுத்து, மக்களினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளினூடாக என்னை பதவி நீக்க முயற்சிக்கிறார்கள். அவ்வாறு இந்தப் பதவியிலிருந்து என்னை நீக்கினால் ஜனக ரத்நாயக்க என்ற பெயரும் நபரொருவரும் மாத்திரமே அங்கிருந்து நீக்கப்படும்.

ஆனால், சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மையினை மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்றத்திலிருக்கும் உறுப்பினர்களே பாதுகாக்க வேண்டும். பாராளுமன்றத்திலிருக்கும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாட்டின் மீது நேசமும் அக்கறையும் இருந்தால் தம்மை பிரதிநிதிகளாக தெரிவு செய்த மக்கள் மீது அக்கறை இருக்குமென்றால், அவர்கள் அனைவரும் கட்டாயம் தமது மனசாட்சிக்கிணங்க, தொலைநோக்கற்ற அரசியல் தேவைக்காக கொண்டுவரப்படும் இந்த யோசனையை கட்டாயம் தோற்கடிக்க வேண்டும்.

என்னை தொடர்ந்து இந்தப் பதவியில் வைத்துக்கொள்வதா, இல்லையா என்பது பிரச்சினையல்ல. இன்று, சுயாதீன ஆணைக்குழுவின் எதிர்காலம் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தீர்மானமிக்க சந்தர்ப்பமாகும். ஆகவே, சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி எனக்கு ஆதரவளிப்பார்கள் என்று நம்புகிறேன். அரசியல் நோக்கங்களுக்காக கொண்டுவரும் இந்த யோசனையை பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து தோற்கடிக்க வேண்டும்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து என்னை நீக்குவார்கள் என்று கருதவில்லை. காரணம், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் மக்களுக்காகவும் நீதிக்காகவுமே முன்னிருந்துள்ளேன். அனைத்துலக அதிகாரமொன்று இருக்குமாக இருந்தால் இன்று நான் பதவியிலிருந்து விலக மாட்டேன். ஒருவேளை நான் பதவி நீங்க வேண்டி ஏற்பட்டால், ஒருபோதும் எந்தவொரு அரசியல் முகாமிலும் இணைந்துகொள்ள மாட்டேன்.

அரசியல் செய்யாமல் நாட்டை மாற்ற முடியாது. நாட்டில் தற்போதுள்ள நிலைமையை மாற்ற சிறந்த நபர்களே தேவையாக இருக்கிறார்கள். அவ்வாறான நபர்களை தெரிவு செய்துகொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இருக்கிறேன்.

பாராளுன்றத்தில் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ளுமாறு பல்வேறு கோரிக்கைகள் என்னிடம் முன்வைக்கப்பட்டுள்ளன. சர்வகட்சித் தலைவர்கள் உள்ளிட்ட பொதுமக்களின் கோரிக்கையும் அதுவாகவே இருக்கிறது. அவர்களின் கோரிக்கைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

### ஜனக நீக்கப்படுவாரா?...

தீர்க்கமான வாக்கெடுப்பு இன்று மாலை பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 10.30 மணிமுதல் மாலை 05 மணிவரை 2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் ஏழாம் பிரிவின்படி ஆணைக்குழுவின் தற்போதைய தலைவரான ஜே.டபிள்யூ.எம்.ஜே.பி.கே. ரத்நாயக்கவை அப்பதவியிலிருந்து நீக்குவது தொடர்பிலான விவாதம் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, தனிப்பட்ட அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பொறுப்புடைய அரச நிறுவனத்தை பயன்படுத்த இடமளிக்க முடியது என்று குறிப்பிட்டு இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் நேற்று (23) அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தவறிழைத்திருக்கலாம். ஆனால், மின்கட்டணத்தை தன்னிச்சையாக அதிகரித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்ததற்காகவே அவரை பதவி நீக்க முயற்சிப்பதாக சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினர் டிலான் பெரேரா உள்ளிட்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். அதற்கமைய விமல் வீரவங்ச தலைமையிலான உத்தர லங்கா சபா, அரசாங்கத்திலிருந்து பிரிந்துச் சென்று சுயாதீனமாக செயற்படும் அநேகமான உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட எதிர்த்தரப்பிலுள்ள முக்கிய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களுடன் கலந்தாலோசித்ததன் பின்னரே இதனை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்தப் பிரேரணைக்கு வாக்களிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று மாலை வரை எந்த இறுதி தீர்மானத்தையும் எடுத்திருக்கவில்லை என்பதுடன் கலந்தாலோசித்ததன் பின்னரே இதுதொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ஆளுங்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இன்றைய பாராளுமன்ற அமர்வுக்கு கட்டாயம் வருகை தருமாறு ஆளுங்கட்சி பிரதம கொறடா அலுவலகம் எழுத்துமூலம் அறிவித்துள்ளது.

### கனேடிய பிரதமரால்...

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் மே 18ஆம் திகதி இனப்படுகொலை திகதியாக அறிவித்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்த நாட்டுக்கு பாரிய அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளார். கனடா என்பது, அந்த நாட்டிலிருந்த செவ்விந்தியர்களை இனப்படுகொலை செய்து 1996ஆம் ஆண்டாகும்போது மிகுதியாக இருந்த குழந்தைகளையும் கொலை செய்த நாடு என்பது அனைவரும் அறிந்த விடயமே. அதற்கான அனுஷ்டிப்பு ஜூன் 21ஆம் திகதி இடம்பெறுகிறது. கனடாவின் பழங்குடியினரின் தினமாக ஜூன் 21ஆம் திகதி அமைந்துள்ளது.

ஆகவே, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜூன் 21ஆம் திகதி, கனடாவில் இடம்பெற்ற இனப்படுகொலை தினமாக அறிவித்து அந்த நாளை நாம் அனைவரும் அனுஷ்டிக்கவேண்டும்.

இடம்பெறாத இனப்படுகொலையை அவர்களால் அனுஷ்டிக்க முடியுமென்றால், உண்மையாக இடம்பெற்ற இனப்படுகொலையை அனுஷ்டிக்கும் தகுதி எமக்கிருக்கிறது. எனவே, அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதுடன் இந்த யோசனையை அனைவரும் வழிமொழிய வேண்டும்.

### வறிய நாடுகளின்...

இந்த தரவரிசை 2021இன் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது. அதன்படி, ஆசியாவின் 20 ஏழ்மையான நாடுகளில் இலங்கை 17ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இது 2021இல் இலங்கையின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5555 அமெரிக்க டொலர்கள் என்பதைக் காட்டுகிறது.

இந்த தரவரிசையில் முதலிடத்தில் வட கொரியா உள்ளது மற்றும் 2021இல் அதன் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 931 டொலர் ஆகும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் ஆப்கானிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன. அந்த நாடுகளின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி முறையே 1149 மற்றும் 1561 அமெரிக்க டொலர்களாகும்.

இந்த தரவரிசையில் 20ஆவது இடத்தை மொங்கோலியா ஆக்கிரமித்துள்ளது, 2021இல் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7178 ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சமாதானத்தைப் பேண...

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தினூடாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பொது மக்களின் சமாதானத்தை பேணுவதற்கான தேவைப்பாட்டை கவனத்தில்கொண்டு, ஆயுதம் தாங்கிய சகல படையினருக்கும் அனைத்துப் பிரதேசங்களிலும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக என்னால் கட்டளை பிறப்பிக்கப்படுகிறது என்று ஜனாதிபதியின் அந்தக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மூன்றரை கிலோ....

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய பாராளுமன்ற உறுப்பினரிடம் 3.5 கிலோ கிராம் தங்கம் மீட்கப்பட்டதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு தங்கம் கொண்டுவரப்பட்டமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நீண்ட நேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்த கொண்டுவந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மீதான விசாரணைகள் அரசியல் தலையீடுகள் இன்றி நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண நேற்று (23) சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

எம்.பி. ரஹீம் கைது செய்யப்பட்டது குறித்து எங்களுக்கு குறுஞ்செய்தி வந்துள்ளது. எம்.பியின் இந்த நடவடிக்கை 225 எம்.பிக்களையும் பிரதிபலிக்கும். ஏனெனில், நாங்கள் அனைவரும் கடத்தல்காரர்களாக கருதப்படுவோம். எனவே கைது செய்யப்பட்ட எம்.பியிடம் உரிய விசாரணை நடத்தப்படுவது முக்கியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம் அரசுடைமை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று (23) அறிவித்தார்.

### புகையிரத பாதை..

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (23) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு கடினமான முயற்சிகளின் மத்தியிலேயே வடக்கு புகையிரத வீதி அபிவிருத்தி பணிகளை விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தோம். அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையாக புகையிரத வீதி முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. இரு முறை அங்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளேன். ஆகவே, அந்த நடவடிக்கைகள் முறையாக இடம்பெற்று வருகின்றன. இதற்கிடையில் பல்வேறு தரப்பினர் அங்கே குறுக்கு வீதிகளை அமைக்குமாறு கோருகிறார்கள்.

ஆனால், வேலைத்திட்டத்தை முன்னெடுப் பவர்களும் பொறியியலாளர்களும் அவ்வாறு குறுக்கு வீதிகளை அமைக்க விரும்பவில்லை. இன்னும் சில மாதங்களில் காங்கேசன்துறை முதல் அநுராதபுரம் வரையில் ஒரு மணிநேரத்துக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக் கூடியதாக இருக்கும். கோரும் இடங்களில் குறுக்கு வீதிகளை பெற்றுக்கொடுத்தால் அந்த பயண வேகத்தை பெற்றுக்கொடுக்க முடியாது.

அதனால், தெளிவான பார்வை இல்லாத இடங்களில் புகையிரத குறுக்கு வீதிகளை பெற்றுக்கொடுக்க பொறியியல் தொழில்நுட்பம் இடமளிக்காது. ஆகவே, வடக்கு மக்களும் இந்த வேலைத்திட்டத்தை இடைநிறுத்த விரும்புவார்கள் என்று நான் நம்பவில்லை.

ஐந்து மாத ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஐந்துமாதங்களில் வேலைத் திட்டம் நிறைவடையாவிட்டால், ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த தொகையை இந்திய நிறுவனத்துக்கு மீளச் செலுத்த வேண்டி ஏற்படும். இந்த பகுதி நிறைவடைந்ததன் பின்னர் அநுராதபுரம் முதல் மஹவ வரையான வீதிகளை மறுசீரமைக்க திட்டமிடப்படவுள்ளன.

ஆகவே இந்த வேலைத்திட்டத்துக்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

### எரிச்சலூட்டும்...

இதற்கு மேலதிகமாக ஊழல், கொலை, வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், துன்புறுத்தல் என்பன தொடர்பில் ஊடகங்கள் செயற்படவேண்டிய விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது. இந்த கலந்துரையாடல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

# தாவரவியல் பூங்காவுக்கான நுழைவுக் கட்டணம் அதிகரிப்பு



தாவரவியல் பூங்காவுக்கான நுழைவுக் கட்டணத்தை ஜூலை 01ஆம் திகதி முதல் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வெளியிட்டுள்ளார்.

அதன்படி, உள்நாட்டைச் சேர்ந்த பெரியவர்களுக்கு 200 ரூபாவும் சிறுவர்களுக்கு 30 ரூபாவும் நுழைவுக் கட்டணமாக அறவிடப்படவுள்ளது.

தாவரவியல் பூங்காவுக்கான நுழைவுக் கட்டணமாக முன்னர் பெரியவர்களுக்கு 100 ரூபாவும் சிறுவர்களுக்கு 20 ரூபாவும் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தாவரவியல் பூங்காவை பார்வையிடவரும் வெளிநாடுகளைச் சேர்ந்த பெரியவர்களுக்கு 3000 ரூபாவும் சிறுவர்களுக்கு 1500 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்பு வெளிநாடுகளைச் சேர்ந்த பெரியவர்களுக்கு 2000 ரூபாவும் சிறுவர்களுக்கு 1000 ரூபாவும் கட்டணம் அறவிடப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

# மாலியில் குண்டு வெடிப்பு இலங்கைப் படையினர் நால்வருக்கு காயம்

மாலியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையுடன் இணைந்து அங்கு பணியாற்றிய நான்கு இலங்கையர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாலியின் கிடால் பகுதியில் உள்ள அவர்களது முகாமில் இருந்து சுமார் 12 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (21) இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் மற்றுமொரு வாகனத் தொடரணிக்கு பாதுகாப்பு வழங்கி கவச வாகனத்தில் பயணித்த போதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# யாழ்.பல்கலைக்கழகத்துக்கு பிரித்தானிய தூதுவர் விஜயம்









இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சரா ஹூல்ரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்று விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய தூதுவர் சரா ஹூல்ரன், இந்தியா மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கான இயக்குநர் பென் மெலோர் ஆகியோர் நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர்.

இந்தச் சந்திப்பின்போது யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சமகால விவகாரங்கள், பிரித்தானியாவுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான கல்விசார் உடன்படிக்கைகள் பற்றிக் கேட்டறிந்த பிரித்தானியத் தூதுவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும் சமுதாயச் சமையலறைக்கும் சென்று பார்வையிட்டார்.




கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்னால் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அகதிகள் குழு நேற்று (23) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. அவர்கள் வாழ வசதி செய்து தரப்பட வேண்டும் என்றும் நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் இதன்போது கோரினர்.

(படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் வைகாசி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீடு, வாகன இலாபங்கள் அமையும்.

**ரிஷபம்:** சமயோசிதமான புத்தியால் அனைத்தையும் சாதிப்பீர்கள். அவசிய செலவுகளை செய்வீர்கள்.

**மிதுனம்:** பேச்சினால் பிழைப்பவர்களுக்கு புகழ், கௌரவம் உண்டு. அரச வகையில் நன்மைகள் உண்டு.

**கடகம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடுவீர்கள். திடீர் தன வரவு ஏற்படும்.

**சிம்மம்:** வீண் டென்ஷனால் குழம்பித் தவிப்பீர்கள். உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

**கன்னி:** தரும சிந்தனையுடன் செயலாற்றுவீர்கள். நினைத்தது நடக்கும். இலாபம் உண்டு.

**துலாம்:** தொழில் துறையில் சாதனை படைக்கும் நாள். முக்கியமான சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** சுபச் செய்தியால் ஆனந்தமடைவீர்கள். எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய நாள்.

**தனுசு:** மௌனம் காத்து, ஆலய வழிபாடு செய்வதால் மன நிம்மதி உண்டு. தூரப்பயணங்கள் வேண்டாம்.

**மகரம்:** அவசர முடிவுகள் எதையும் எடுக்காமல் இருப்பது நல்லது. பெண்களால் உதவிகள் உண்டு.

**கும்பம்:** கோபங்களை அடக்கிக் கொள்வதால் வீண் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம். செலவுகள் அதிகம்.

**மீனம்:** தெளிந்த மனதுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் நிறைந்த நன்நாள்.

**திதி** : பஞ்சமி பி.இ.03.01 வரை பின் சஷ்டி (வளர்)

**நட்சத்திரம்** : புனர்பூசம் பி.ப.5.19 வரை பின் பூசம்

**யோகம்** : மரண யோகம் பி.ப.3.06 வரை பின் அமிர்த சித்தம்

**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்** : மு.ப. 8.50– 9.50 மணிவரை

**ராகுகாலம்** : 11.50– 1.20 மணிவரை

**எமகண்டம்** : 7.20 – 8.50 மணிவரை

**குளிகை** : 10.20 – 11.50 மணிவரை

**சந்திராஷ்டமம்** : தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிர்ஷ்டம்** : திருவாதிரை, சுவாதி, சதயம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்** :...

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# ஐக்கிய நாடுகளின் 28ஆவது காலநிலை மாற்ற மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதிக்கு அழைப்பு



ஐக்கிய நாடுகளின் 28ஆவது காலநிலை மாற்ற மாநாட்டில் (COP 28) பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யான் (Mohamed bin Zayed Al Nahyan) அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதியினால் அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதம், ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலீத் நாசர் அல் அமெரியினால் நேற்றுமுன்தினம் (22) ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு (COP 28) எதிர்வரும் நவம்பர் 30 முதல் டுபாய் எக்ஸ்போ சிட்டியில் உலகத் தலைவர்கள், அரச பிரதிநிதிகள், சூழலியலாளர்கள், புத்திஜீவிகள் ஆகியோரின் பங்களிப்புடன் ஆரம்பமாகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் 52ஆவது தேசிய தின விழாவுடன் இணைந்ததாக அரச தலைவர்கள் மாநாடு டிசம்பர் 01 முதல் 02ஆம் திகதிவரை நடைபெறும்.

காலநிலை மாற்றம் மற்றும் நாடுகள் அதை எவ்வாறு சமாளிக்க திட்டமிட்டுள்ளன என்பன குறித்த உரையாடலுக்கான முன்னணி சர்வதேச தளமாக காலநிலை மாற்ற உச்சிமாநாடு செயல்படுகிறது.

மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு உடன்பாட்டில் (UNFCCC) இணைந்துள்ள உறுப்பு நாடுகளிடையே, காலநிலை மாற்றம் குறித்த கலந்துரையாடல்களை வழிநடத்துவதில் இந்த மாநாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

மாற்றத்துக்கான கூட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக அனைத்து பங்குதாரர்களுக்கும் புதிய, சமமான தீர்வுகளுக்கு பங்களிப்பைப் பெறுவதும் சமமான வாய்ப்புகளை வழங்குவதும் இந்த மாநாட்டின் குறிக்கோளாகும். உலகளவில் நிலையான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியைப் பேணுவதற்கும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் அனைத்து உறுப்பு நாடுகளின் கூட்டு அர்ப்பணிப்பின் முக்கியத்துவமும் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்படுகிறது.

காலநிலை மாற்றத்தை கையாள்வதில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தியுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை சமாளிப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

மேலும், இந்த அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டமை தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்டுள்ள ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யான், இலங்கை மக்களின் முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காக அரசாங்கத்தின் முன்னெடுப்புகளுக்கும் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றத்தின் புதிய செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர கடமை பொறுப்பேற்பு









பாராளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட குஷானி ரோஹணதீர நேற்று (23) காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக காலை பாராளுமன்றத்துக்கு சென்ற ரோஹணதீரவை, பாராளுமன்ற உதவிச் செயலாளர்களான டிக்கிரி கே.ஜயதிலக மற்றும் ஹங்ச அபேரத்ன ஆகியோர் வரவேற்றனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் புதிய செயலாளர் நாயகம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டதுடன், மகா சங்கத்தினர் ஆசீர்வதித்து மத அனுஷ்டானங்களை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு, சபாநாயகரினால் சான்றுரைப்படுத்தப்படவுள்ள ரத்தனதிஸ்ஸ அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தின் உண்மைப் பிரதியில் கையொப்பமிட்டு அவர் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

பாராளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, குஷானி ரோஹணதீரவின் குடும்ப உறுப்பினர்கள், பாராளுமன்றத் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

பாராளுமன்ற அமர்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியபோது படைக்கலசேவிதர் முன்செல்ல சபாநாயகர், செயலாளர் நாயகம் உள்ளிட்ட செயலாளர்கள் குழுவினர் சபா மண்டபத்துக்குள் வருகை தந்தனர்.

பின்னர், அரசியலமைப்பின் 65(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதியின் பாராளுமன்ற பணியாட்தொகுதிப் பிரதானியாகவும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமாக பதவி வகித்த குஷானி அனூஷா ரோஹணதீர 2023 மே 23ஆம் திகதி முதல் பாராளுமன்ற செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றச் செயலாளர் நாயகமாக பதவி வகித்த தம்மிக தசநாயக்க 2023 மே 23ஆம் திகதி முதல் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பதையும் சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியை அம்பலாங்கொட தர்மாஷோக்க கல்லூரியில் பூர்த்தி செய்த இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞானத்தில் இளவிஞ்ஞானமாணிப் பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் சட்டத்தரணியுமாவார்.

பாராளுமன்றத்தில் தனது சேவையை 1999ஆம் ஆண்டு ஆரம்பித்த இவர், தற்போதைய நியமனத்தைப் பெறுவதற்கு முன்னர் பாராளுமன்றத்தின் பல்வேறு அலுவலகங்களில் உதவிப் பிரதான உத்தியோகத்தர், பிரதிப் பிரதான உத்தியோகத்தர், உதவிச் செயலாளர் நாயகம், பதவியணித் தலைமை அதிகாரி, பிரதிச் செயலாளர் நாயகம் ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

பாராளுமன்ற சேவையில் இணைந்து கொள்வதற்கு முன்னர் சம்பத் வங்கியின் கனிஷ்ட நிறைவேற்று அதிகாரியாகவும் என்வயர்ன்ட்மென்டல் பவுன்டேஷன் நிறுவனத்தில் கனிஷ்ட விஞ்ஞானியாகவும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளரின் (தொலைதூரக் கல்வி) செயலாளராகவும் இன்போமட்டிக்ஸ் தனியார் நிறுவனத்தின் நிலைய இணைப்பாளராகவும் தனியார் துறையில் பணியாற்றியுள்ளார்.

இவர் இந்திய லோக்சபாவின் பாராளுமன்ற கற்கைகள் மற்றும் பயிற்சிகள் நிறுவகம், கனடாவின் மொன்ரியல் மக்கில் பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள பல்வேறு நிறுவனங்களில் பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள், சட்டவாக்கம் உள்ளிட்ட விடயங்களில் விரிவான பயிற்சியைப் பெற்றுள்ளார். சட்டத்தரணி ஹரிகுப்தா ரோஹணதீரவை மணந்துள்ள அவர் மூன்று பிள்ளைகளின் தாயுமாவார்.

## வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 24ஆம் திகதி, புதன்கிழமை**

# மதுவின் பாதிப்புகள் குறித்தான அறிவுறுத்தல் கட்டாயத் தேவை

அயர்லாந்து சட்டமொன்றை இயற்றியுள்ளது. அதன்படி இனி அனைத்துவகை மதுபானங்களும் அவற்றின் நுகர்வு நேரடியாக கல்லீரல் நோய் மற்றும் புற்றுநோயுடன் தொடர்புடையது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இந்த விரிவான சுகாதார லேபிள்கள் அல்லது ஸ்டிக்கர்கள் – மே 22, 2026க்குப் பிறகு கட்டாயமாகும். இவை கர்ப்பமாக இருக்கும்போது மது அருந்துவதற்கு எதிராகவும் எச்சரிக்கும். மேலும், சாராயத் தயாரிப்புகளின் கலோரி எண்ணிக்கையையும் வழங்க வேண்டும்.

வைன் உற்பத்தி செய்யும் நாடுகளான இத்தாலி, ஸ்பெயின் மற்றும் பிற ஆறு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், அயர்லாந்தின் சுகாதார அமைச்சர் ஸ்டீபன் டோனெல்லியின் இந்த முடிவை விமர்சித்தாலும், சுகாதார வல்லுநர்கள் பலர் இதை ஆதரித்துள்ளனர் .

ஐரிஷ் மக்கள் பாரம்பரியமாக அதிகமாக மது அருந்துவதில் முதன்மையானவர்கள். மேலும், நாட்டின் கலாசாரத்தில் மதுசாரம் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஐரிஷ் அரசாங்கத்தின் 2021 கணக்கெடுப்பில், மது அருந்துதல் குறைந்து வந்தாலும், அது தொடர்ந்து அதிக வீதமாகவே இருந்தது. – 15 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 37% பேர் வாரத்திற்கு ஒரு முறையாவது அருந்தினர் (2018 இல் 41%) மற்றும் 15% பேர் அதிகமாக மது அருந்தியுள்ளனர். (2018 இல் 28%).

பல நாடுகளில் மதுபானங்கள், குறிப்பிட்ட வயதுக்குட்பட்டவர்கள் குடிப்பழக்கத்திற்கு எதிராக, குடித்துவிட்டு வாகனம் செலுத்துவதற்கு எதிராக எச்சரித்தாலும், தென் கொரியா மட்டுமே தற்போது மதுசாரம் மற்றும் புற்றுநோய்களுக்கு இடையிலான தொடர்பைப் பற்றி எச்சரிக்கிறது. தென்னாபிரிக்கா 2017இல் கடுமையான மதுசார எச்சரிக்கை தேவைப்படும் ஒரு சட்டத்தை இயற்றியது. ஆனால், உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தத்தின் கீழ் 2020இல் அதை இரத்து செய்தது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உலக மதுபானங்கள் மீதான சுகாதார எச்சரிக்கைகள் குறித்த 2022 அறிக்கையின்படி, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் 1.15% க்கும் அதிகமான மதுசாரம் கொண்ட அனைத்து தயாரிப்புகளிலும், கர்ப்பமாக இருக்கும்போது மதுசாரம் உட்கொள்வதால் ஏற்படும் அபாயங்கள் பற்றிய எச்சரிக்கை தேவை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு முதல் உலக சுகாதார நிறுவனத்தால், புற்று நோயை உண்டாக்கும் Class-1 Carcinogen முகவராக மது பட்டியலிடப்பட்டுள்ளது.

மதுசார நுகர்வு என்று வரும்போது, ஆரோக்கியத்தை பாதிக்காத பாதுகாப்பான அளவு என்று எதுவும் இல்லை என்று இந்த வருடத்தின் தொடக்கத்தில், உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்தது. ஐரோப்பிய நாடுகளில் ஏற்படும் கல்லீரல் புற்றுநோய்களில் 40% முதல் 52% வரை மது அருந்துவதால் ஏற்படுகிறது.

மதுபானம் அருந்துவது தொடர்பிலான புதிய வழிகாட்டு நெறிமுறைகளை பிரிட்டன் சில காலங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது. அளவுக்கு அதிகமாக குடிப்பதால் உடல்நலத்துக்கு ஏற்படும் தீங்குகளை குறைக்கும் நோக்கில், இந்தப் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டன.

மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு மதுபானத்தை அருந்துவது சிறந்தது என்று தெரிவித்த பிரிட்டிஷ் மருத்துவ அதிகாரிகள், அதிகளவில் மதுபானத்தை அருந்துவதால், புற்றுநோய்க்குள்ளாகும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக ஆய்வொன்றில் கண்டறிந்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

மதுபானத்தை தொடர்ச்சியாக அருந்துபவர்கள், வாரத்திற்கு 14 யூனிட்களுக்கு அதிகமாக அதனை உட்கொள்ளக்கூடாது என்று அந்த ஆய்வு பரிந்துரை செய்தது. அதாவது, ஒரு வாரத்திற்கு அதிகபட்சமாக ஆறு பைன்ட் அளவு பியர் அல்லது ஏழு கிளாஸ் வைன் ஆகியவற்றுக்கு மேலாக உட்கொள்வதைத் தவிர்க்குமாறு அந்த அறிவுறுத்தல் கூறியது.

கர்ப்பிணிப் பெண்கள் மது அருந்துவதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும் எனவும் புதிய வழிகாட்டு நெறிமுறைகள் கூறுகின்றன. தினந்தோறும் மதுபானம் அருந்தும் பழக்கம் உள்ளவர்கள், வாரத்தில் சில நாட்கள், அதனை அருந்துவதை தவிர்த்துக்கொள்வது சிறந்தது எனவும் புதிய ஆய்வில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மது அருந்துவதால் ஏற்படும் நோய்களுக்கு அப்பால், அதிக மது அருந்துபவர்கள் வீதி விபத்து மற்றும் காயங்களுக்குள்ளாவதும் அதிகம் நடைபெறுவதாக அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

புதிய ஆய்வின் பரிந்துரையின்படி பியர் என்றால் ஒரு பைண்ட் அதாவது 576 மில்லி லிற்றர் அளவு, வைன் என்றால் 175 மில்லி லிற்றர் அளவு, விஸ்கி அல்லது ரம் போன்ற கூடுதல் மதுசாரம் கொண்ட மதுபானமாக இருந்தால் 50 மில்லி லிற்றர் அளவுகள் ஆகியவை சராசரியாக இரண்டு யூனிட் அளவுகளாக மதிப்பிடப்பட்டுள்ளன. பெண்கள் கர்ப்பிணியாக இருக்கும்போது, மது அருந்த வேண்டிய அளவு முன்னர் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்கள் முழுமையாக மது அருந்தக் கூடாது என்று புதிய ஆய்வு பரிந்துரைக்கிறது.

குறைந்தளவில் மது அருந்துவது மாரடைப்பை தடுக்கும் என முந்தைய சில ஆய்வுகள் தெரிவித்திருந்தாலும், அது தொடர்ந்தும் கருத்திற்கொள்ளப்படாது என புதிய ஆய்வு தெரிவிக்கிறது. அத்தோடு, அதிக மது அருந்துவதனால் வாய், தொண்டை மற்றும் மார்பு ஆகிய பகுதிகளில் புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாகவும் ஆய்வு கண்டறிந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை சிகரெட் பெட்டிகளில் சிகரெட்டினால் ஏற்படும் விளைவுகளை குறிப்பிட்டு எச்சரிக்கை விளம்பரங்கள் இருந்தாலும், மதுபான போத்தல்களில் அப்படியான எச்சரிக்கைகள் இல்லை. இப்போது சர்வதேச ரீதியாக இவ்வாறான எச்சரிக்கைகள் வரும்போது அவற்றையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

2021ஆம் ஆண்டில் மட்டும் இலங்கையின் மக்கள் தொகையில் 28% ஆனோர் மது அருந்தினர்.

உயர் இரத்த அழுத்தம், இதய நோய், பக்கவாதம், கல்லீரல் நோய்கள், செரிமான பிரச்சினைகள், புற்றுநோய்கள் (மார்பகம், வாய், தொண்டை, உணவுக்குழாய்) போன்ற மது அருந்துவதால் ஏற்படும் நோய்களால் இலங்கையில் நாளொன்றுக்கு 55 பேர் உயிரிழப்பதாக சொல்லப்படுகிறது. மதுவும் ஒரு போதைப்பொருள்தான் என்பது மக்களுக்கு உணர்த்தப்படுத்தல் அவசியம்.




**01. புதிய அபிவிருத்தி கருத்திட்டங்கள்/ வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்காக தேசிய அபிவிருத்திக்குழு ஒன்றை அமைத்தல்**

சரியான வகையில் அடையாளம் காணப்படாத மற்றும் முறைசார் மதிப்பீடுகளற்ற கருத்திட்டங்கள்/ வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதால் கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட ஒருசில கருத்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைய முடியாமல் போயுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், அரசின் புதிய கருத்திட்டங்கள், வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்யும் செயன்முறைக்கு தேசிய அபிவிருத்திக் குழுவொன்றை நியமிப்பதற்கான முன்மொழிவு 2023 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டம் நிதி விடயதான அமைச்சராக ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவால் கருத்தில் கொள்ளப்பட்ட மதிப்பீட்டு செலவுகள் அல்லது அதற்கு அதிகமான மதிப்பீட்டு செலவுகளுடன் கூடிய கருத்திட்டங்கள்/ வேலைத்திட்டங்கள் தொடர்பாக தனது பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக முன்னாள் திறைசேரி பிரதிச் செயலாளராக கடமையாற்றிய தயா லியனகே தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. பசுமைப் பத்திரங்கள் சட்டகம்**

பசுமை முதலீடுகளில் ஈடுபடுதல் தொடர்பான அரசாங்கம் தனது எதிர்பார்ப்பை 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் வெளியிட்டுள்ளது. அவ்வாறான பசுமைப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் கிடைக்கின்ற நிதியை மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, வலுசக்தி வினைத்திறன், பசுமைக் கட்டடங்கள், தூய போக்குவரத்து, நிலைபெறுதகு நீர் முகாமைத்துவம் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம், சுற்றாடல் மாசடைவதைத் தடுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் சுழற்சிப் பொருளாதார நடவடிக்கைகள், காலநிலை மாற்றங்களுக்கான தகவமைப்புகள், உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளில் பயன்படுத்தக்கூடிய இயலுமை காணப்படுகின்றது.

நீலப் பசுமை மற்றும் நிலைபெறுதகு வகையிலான நிதிச்சாதனங்கள் மூலம் முதலீடுகளை அணுகுவதற்கான சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொண்ட சட்டகத்தை நிறுவுவதற்காக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகப் பேரவை, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலகப் பசுமை விருத்தி நிறுவனம் போன்ற நிறுவனங்கள் உடன்பாடு தெரிவித்துள்ளன. அதற்கமைய, தற்போது பசுமைப் பத்திரங்கள் சட்டகம் வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூகப் பேரவை மற்றும் உலகப் பசுமை விருத்தி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தற்போதைய சட்டவரைபை அங்கீகாரம் பெற்ற ஆவணமாக மாற்றுவதற்கு இயலுமை கிட்டும் வகையில் இரண்டாம் தரப்பினரின் அபிப்பிராயத்தை பெற்றுக்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. கப்பல் தொழில்துறை உள்ளிட்ட விநியோக சேவைகள் அபிவிருத்திக்கான கொள்கை சட்டகத்தைத் தயாரித்தல்**

கப்பல் தொழில்துறை உள்ளிட்ட விநியோக சேவைகள் துறையில் போட்டித்தன்மையானது, எந்தவொரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக முக்கியமான காரணியாக அமைவதுடன், சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கருத்தில் கொள்ளும் போது, இலங்கை போன்ற தீவகப் பொருளாதாரத்திற்கு அது மிகவும் ஏற்புடையதாக அமையும். இலங்கையில் கப்பல் தொழில்துறை உள்ளிட்ட விநியோக சேவைகள் துறைக்கு ஏற்புடைய வகையில் தற்போது காணப்படுகின்ற கொள்கைகள் மற்றும் ஒழுங்குறுத்தல்கள் சட்டகம் மிகவும் பாதுகாப்பாக அமைவதுடன், அது குறித்த தொழில்துறை அபிவிருத்திக்கான முதலீடுகளைப் பாதுகாப்பதற்கோ அல்லது போட்டித்தன்மை, செலவு பயனுறு வகையிலான விநியோக சேவைகளைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு அவ்வாறான சேவைகளை விநியோகிப்பதற்கான நேயமிகு நிலைமைகளை உருவாக்குவதற்குப் போதுமானதல்ல என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு விநியோக சேவைகள் தொழில்துறை தொடர்பான கொள்கைச் சட்டகத்தை உருவாக்க வேண்டிய தேவை 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, கப்பல் தொழில்துறை உள்ளிட்ட விநியோக சேவைகளுக்கு ஏற்புடைய வகையில் தற்போது காணப்படுகின்ற கொள்கைகள் மற்றும் கட்டளைகளை ஆராய்ந்து சர்வதேச நியமங்களுக்கு இணங்க 2023-2027 காலப்பகுதிக்கான விநியோக சேவைகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்காக திறைசேரி செயலாளர் தலைமையில், ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய கொள்கைக் குழுவொன்றை நியமிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 2021 ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புகள் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்கல்**

2021 ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் துறைமுக நகரம் விசேட பொருளாதார வலயமாக நிறுவப்பட்டுள்ளது. இலங்கையை நவீனமயமாக்கல், பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல் மற்றும் சேவைகள் ஏற்றுமதியின் முன்னோடியாக எமது நாட்டை மாற்றுதல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக சர்வதேச ரீதியில் போட்டித்தன்மையுடன் கூடிய வர்த்தகங்களை மேற்கொள்வதற்கு இயலுமான சூழலை உருவாக்குவதற்காக கொழும்புத் துறைமுக நகரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஜனாதிபதி அல்லது கொழும்பு துறைமுக நகரத்தின் விடயதானம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சருடன் ஆலோசித்து ஆணைக்குழுவால் செயல் நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களெனப் பெயர் குறிப்பிடும் வியாபாரங்களை அடையாளம் கண்டு விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவதற்காக செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதல்நிலை வியாபாரங்கள் மற்றும் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம்நிலை வணிகங்களென இரண்டு வகையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த விலக்களிப்புகள் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05.'புதிய மைல்கல் பயணம்' - முதலாவது சர்வதேச சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் பற்றிய மாநாடு, முதலீட்டு ஒன்றியம் மற்றும் கண்காட்சி**

இலங்கையில் சமகால மற்றும் எதிர்கால சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் தொழில்துறையில் ஈடுபடுகின்ற அனைத்துப் பங்கீட்டாளர்களுக்கும் ஒரு தளத்தை வழங்கும் நோக்கில் 'புதிய மைல்கல் பயணம்' எனும் பெயரிலான சர்வதேச சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் மாநாடு, முதலீட்டு ஒன்றியம் மற்றும் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கையின் சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் தொழில்துறைக்கு உலகளாவிய வணிக அடையாளத்தின் பெறுமதியைக் கட்டியெழுப்புதல் மற்றும் பாரியளவிலான முதலீடுகள் மற்றும் பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச சுரங்க அகழ்வு மற்றும் கனிமங்கள் மாநாடு, முதலீட்டு ஒன்றியம் மற்றும் கண்காட்சியை 2023 ஒக்டோபர் மாதத்தில் நடத்துவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. ஆயுர்வேத சட்டத்தை திருத்தம் செய்தல்**

நிறைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு இயலுமான வகையிலும் சமகால தேவைகளுக்கு பொருத்தமான வகையிலும் 1961ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2022.10.31ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. இலங்கையில், மேல்மாகாண பிரதேசத்தில் பெருநகர பிரதான திட்டம் - 2048 நடைமுறைப்படுத்தல்**

2015ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்டுள்ள மேல் மாகாண பிரதேசங்களில் பெருநகர பிரதான திட்டங்களை மீளாய்வு செய்வதற்கு சிங்கப்பூரின் ஜுரோங் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு 2023.05.08ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஆரம்ப பிரதான திட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள கருத்திட்டங்களின் முன்னுரிமையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமான வகையில் குறித்த திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு 'மேல்மாகாண பிரதேச பெருநகர பிரதான திட்டம் - 2048' தயாரிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தயாரிக்கப்பட்ட குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் வசதிகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக பிரதமர் தலைமையில் அமைச்சர் குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08.கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் 'கொம்பஞ்ஞ வீதிய' கிராம உத்தியோகத்தர் பிரிவை மும்மொழிகளிலும் அவ்வாறே அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்**

கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் 'கொம்பஞ்ஞ வீதிய' கிராம உத்தியோகத்தர் பிரிவு சிங்கள மொழியில் 'கொம்பஞ்ஞ வீதிய' எனவும் தமிழ் மொழியில் 'ஸ்லேவ் ஐலன்ட்' எனவும், ஆங்கில மொழியில் 'Slave island' எனவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெயர் மும்மொழிகளிலும் 'கொம்பஞ்ஞ வீதிய' என அறிமுகப்படுத்துவது மிகப் பொருத்தமானது என முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய 743/5 1992.12.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்து புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் 'கொம்பஞ்ஞ வீதிய' என்பதை அவ்வாறே மும்மொழிகளிலும் வெளியிடுவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவலகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

**09. வெளிவிவகார அமைச்சு மற்றும் சவூதி அரேபிய இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சுக்குமிடையில் அரசியல் ஆலோசனை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வெளிவிவகார அமைச்சு மற்றும் சவூதி அரேபிய இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சுக்குமிடையில் அரசியல் ஆலோசனை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மாழியப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் நேர்மய வகிபாங்குகள் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள், அரசியல் போக்குகள் மற்றும் பரஸ்பர ரீதியான முக்கியமான விடயங்கள் பற்றி கருத்துகளை பரிமாறிக்கொண்டு இருதரப்பு தொடர்புகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. கார்பன் அடிச்சுவடு இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

பரிஸ் ஒப்பந்தத்தின் 6ஆவது உறுப்புரை மூலம் சர்வதேச கார்பன் வணிகத்தில் பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்கும் நோக்கில் இலாபகரமான வகையில் ஒத்துழைப்புடன் செயலாற்றுவதற்கு நாடுகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைய பரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டகத்தில் கார்பன் அடிச்சுவடு தொடர்பாக இலங்கை அரசு மற்றும் சிங்கப்பூர் அரசுக்கும் இடையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான டோகா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கச் சேவைகளுக்கான ஒப்பந்தம் மற்றும் டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் பண்டங்கள் களஞ்சியப்படுத்தல் சேவைகளுக்கான ஒப்பந்தம் வழங்கல்**

டோகா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கச் சேவைகளை வழங்கல் மற்றும் டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் பண்டங்கள் களஞ்சியப்படுத்தல் சேவைகளுக்கான ஒப்பந்தம் வழங்கலுக்காக விலைமுறி கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய டோகா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் Qatar Aviation Services W.L.L இற்கு வழங்குவதற்கும், டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் பண்டங்கள் களஞ்சியப்படுத்தல் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் Dnata கம்பனிக்கு வழங்குவதற்கும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மைகள் அல்லது குடியியல் குழப்பங்களின் விளைவாக உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் நினைவகமொன்றை அமைத்தல்**

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை குடியியல் குழப்பங்கள், அரசியல் அமைதியின்மைகள், இன மோதல்கள் மற்றும் நீண்டகால ஆயுத மோதல்கள் போன்ற வரலாறுகளுக்கு முகங்கொடுத்துள்ளதுடன், குறித்த காலப்பகுதியில் அனைத்து இன, சமய, தொழில் மற்றும் ஏனைய தனித்துவங்களைக் கொண்ட பிரஜைகள் அவ்வாறான அபாயங்களுக்கும் சொல்லொணாத் துயரங்களுக்கும் ஆளாகியுள்ளனர். இன ரீதியான, சமய ரீதியான, அரசியல் ரீதியான கருத்தூக்கங்கள் அல்லது வேறு காரணங்களின் அடிப்படையில் எந்தவொரு வகையான மோதல்களும் மக்களின் நல்வாழ்க்கையில் மிகவும் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், தேசத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு தடையாகவும் அமைகின்றமை கடந்தகால கசப்பான அனுபவங்கள் எமக்குப் பறைசாற்றுகின்றன. எவ்வாறாயினும், மக்களின் அமைதியையும் பாதுகாப்பையும் ஆபத்துக்குள்ளாக்கி சமூக, பொருளாதார கட்டமைப்புகளை சீரழிக்கின்ற அத்தகைய சம்பவங்கள் அடிக்கடி தோன்றுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

2018ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகச் சட்டத்தின் மூலம் நினைவேந்துகை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் கூட்டாக இழப்புகளை வழங்குவது அழுத்தங்களுக்கு உள்ளாகிய நபர்களின் சமூகங்களுக்கும் குழுக்களுக்கும் ஏதுவான வகையிலான உரிமை என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மைகள் அல்லது குடியியல் குழப்பங்களின் விளைவாக உயிர்நீத்த பொதுமக்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அனைத்து நபர்களையும் நினைவு கூருவதற்கான நினைவகத்தை நல்லிணக்கம் மற்றும் மீளிணைப்பின் அடையாளமாக கொழும்பு நகரில் பொருத்தமான இடமொன்றில் நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நக்கல் நமசிவாயம்

போயும் போயும் மூன்றரை கிலோ தங்கத்தைக் கொண்டுவந்து சிக்கியுள்ளார் அலி சப்ரி ரஹீம் எம்.பி..!

அரசியல்வாதிக்குண்டான தகுதி, மரியாதையெல்லாமே போச்சு..!



## இன்றைய நாளில்...

- 1762 – பேச்சுவார்த்தைக்காக இலங்கை வந்து சேர்ந்த பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்தின் பிரதிநிதி ஜோன் பைபஸ் என்பவரை கண்டி மன்னர் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் வைபவரீதியாக வரவேற்றார்.
- 1844 – முதலாவது மின்னியல் தந்திச் செய்தியை சாமுவெல் மோர்ஸ் வொஷிங்டனில் இருந்து பால்ட்டிமோருக்கு அனுப்பினார். அனுப்பப்பட்ட செய்தி: What hath God wrought (விவிலியத்தில் எண். 23:23).
- 1958 – இலங்கை இனக்கலவரம், 1958: இலங்கையில் பொலன்னறுவை புகையிரத நிலையத்தில் புகையிரதத்தில் வந்த தமிழ்ப் பயணிகள் தாக்கப்பட்டனர். பல இடங்களிலும் இனக்கலவரம் பரவியது.
- 1962 – மேர்க்குரித் திட்டம்: அமெரிக்க விண்ணோடி ஸ்கொட் கார்ப்பென்டர் பூமியை அவ்ரோரா-7 விண் பெட்டகத்தில் மூன்று முறை வலம் வந்தார்.
- 1981 – இலங்கையில் ஐ.தே.கவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆ.தியாகராஜா தேர்தல் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டபோது இனந்தெரியாதோரால் சுடப்பட்டு, அடுத்த நாள் உயிரிழந்தார்.
- 2000 – இலங்கையில் நோர்வே தூதரகம் மீது குண்டு வீசப்பட்டது.
- 2007 – ஈழப்போர்: யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவில் இலங்கைக் கடற்படைத்தளத்தைக் கடற்புலிகள் தாக்கி அழித்தனர்.
- 2007 – ஈழப்போர்: கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்ததுடன், நால்வர் காயமடைந்தனர்.

# கடற்றொழிலாளர்களுக்கு சீனா மண்ணெண்ணெய் நன்கொடை

## காலத்தின் தேவையறிந்த உதவிக்கு அமைச்சர் டக்ளஸ் நன்றி தெரிவிப்பு



சீன அரசாங்கத்தினால் நாடளாவிய ரீதியில் உள்ள கடற்றொழிலாளர்களுக்காக வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் விநியோகிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு நேற்று (23) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இதற்கிணங்க நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 128 எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக 27,000 மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களுக்கு தலா 150 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் நீண்ட காலமாக நிலவிவரும் கலாசார மற்றும் நட்புறவு காரணமாக சீனா எமது நாட்டுக்கு பெருமளவில் உதவி செய்து வருகிறது. அதனடிப்படையில் இலங்கையில் நிலவும் எரிபொருள் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக, காலத்தின் தேவையறிந்து விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக ஒரு தொகை டீசல் வழங்கப்பட்டுள்ளது. தன்னுடைய வேண்டுகோளுக்கமைய தற்போது டீசலுக்குப் பதிலாக கடற்றொழிலாளர்களுக்கு சீனத் தூதுவர் தலைமையில் மண்ணெண்ணெய் வழங்கக் கிடைத்தமைக்காகத் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் கடற்றொழிலாளர்கள் தினமும் 5,000 முதல் 10,000 ரூபா வரை மண்ணெண்ணெய்க்காக செலவிடுகின்றனர். அச் செலவைக் குறைப்பதற்காக இலங்கையிலுள்ள தனியார் நிறுவனமொன்று மின்கலத்தினால் இயங்கும் படகு இயந்திரங்களைத் தயாரித்து வருகிறது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட இயந்திரத்தை சீனத் தூதுவரின் பிரசன்னத்துடன் இன்று அறிமுகம் செய்து வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ் இயந்திரத்தின் செயற்பாட்டை மேலும் மேம்படுத்துவதற்கு உதவ வேண்டுமென சீனத் தூதுவரிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். அத்துடன், பாணந்துறை கடற்றொழில் துறைமுகத்தை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பிரதேசமாக மாற்றுவதற்காக சீனாவின் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த உரையாற்றுகையில்,

எமது நாட்டுக்கு பெருமளவு உதவிசெய்யும் நாடு சீனா. எமது நாடு தற்போது முகங்கொடுத்து வரும் பிரச்சினையிலிருந்து மீள்வதற்காக மென்மேலும் சீனாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென்ஹொங், சீனாவும் இலங்கையும் நீண்டகாலமாக சிறந்த நட்புறவுடன் செயற்பட்டு வருகின்றன. அந்த உறவுகளைத் தொடர்ந்து பேணுவதற்கு தாம் பாடுபடப் போவதாகவும் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு படகு, வலைகள் மற்றும் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மொறட்டுவை பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜயந்த கெட்டகொட, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, அமைச்சின் மேலதிக செயலாளர் தம்மிக்க ரணதுங்க, மொரட்டுவை நகர சபையின் முன்னாள் மேயர் சமன் லால், கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிலங்க ஜயவர்தன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் மக்கள் சார்ந்த விடயங்களில் உடனடியாக முடிவெடுக்கப்படுவதில்லை

## அபிவிருத்திக்குழுத் தலைவர் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் செல்வம் எம்.பி.

அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் மக்கள் சார்ந்த விடயங்களுக்கு உடனடியாக முடிவெடுக்கப் படுவதில்லை. அதிகாரிகளும் சமுகமளிப்பதில்லை. இது தொடர்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் கவனமெடுக்கவேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மின்சாரக் கட்டண விடயத்தில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் நியாயமாக நடந்துள்ளதுடன் அவரது கடமையையும் சரியாகச் செய்துள்ளார். அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்ததுடன் அது தொடர்பாக சரியான வழிமுறைகளை கையாளாத சூழ்நிலையில் அவர் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். அந்த வகையில் அவரின் எதிர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம்.

எதிர்வரும் புதன்கிழமை (இன்று) பாராளுமன்றத்தில் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரை நீக்குவது தொடர்பான மசோதா வருகின்ற போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் இணைந்து இந்த விடயம் தொடர்பாக ஒரு முடிவெடுப்போம்.

விலைவாசி அதிகரிப்பின்போது அவர் மக்கள் சார்பாக நின்றவர். எனவே, பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவருக்கு ஆதரவளிக்கும் சூழல் உருவாகும். எனவே, நாம் கூடி இறுதி முடிவெடுத்து அவருக்கு ஆதரவாக செயற்படுவதே சாலச்சிறந்தது.

அத்துடன், வவுனியா பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களில் நாம் கலந்துகொள்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையில் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் நடைபெறும் நேரங்களில் கொழும்பில் முக்கிய சந்திப்புகள் இடம்பெறும்போது அதில் கலந்துகொள்ள முடியாத சூழல் ஏற்படுகின்றது.

எம்மிடம் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளதுடன் வினோநோகராதலிங்கம் பெரும்பாலான கூட்டங்களில் தனது பங்களிப்பைச் செய்துள்ளார். அத்துடன், முழுமையாக நாங்கள் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டங்கதைள தவிர்ப்பதில்லை. இனிவரும் கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்வோம்.

அத்துடன், அபிவிருத்திக்குழு என்ற போர்வையில் ஒரு விடயம் முடிவாக எடுக்கப்படாமல், காலந்தாழ்த்தப்படுகின்றது.முதலில் தீர்மானமாக எடுப்போம்,பின்னர் ஜனாதிபதிக்கு கொடுப்போம் என்றவாறே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

மாறாக மக்கள்நலன் சார்ந்த விடயங்களுக்கு உடனடியாக முடிவெடுக்கப்படுவதில்லை. அத்துடன், இக்கூட்டங்களுக்கு திணைக்கள அதிகாரிகள்கூட கலந்து கொள்வதில்லை.

எனவே, கூட்டங்களின்போது முடிவெடிக்க வேண்டிய விடயங்களுக்கு அன்றையதினமே முடிவெடுத்தாக வேண்டும். அதற்காக நாங்கள் நிச்சயமாக குரல்கொடுப்போம். வெறும் கூட்டமாக இல்லாமல், அதிகாரிகள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை அபிவிருத்திக்குழுத் தலைவர் ஏற்படுத்த வேண்டும்.

அதிகாரிகள் வராவிடில் அவ்விடயம் குறித்து முடிவு எட்டமுடியாத நிலை ஏற்படும். எனவே, அபிவிருத்திக்குழுத் தலைவர் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# பெருந்தோட்ட மக்களின் விபரங்கள் நிதி அமைச்சுக்கும் உலக வங்கிக்கும் கையளிக்கப்பட்டுள்ளன

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் எம்.பி.



மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா, தென், வடமேல் ஆகிய மாகாணங்களுக்குட்பட்ட பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு அவிசாவளை, களுத்துறை, குருநாகல், காலி, மாத்தறை ஆகிய 12 மாவட்டங்களிலுள்ள 102 பிரதேச செயலகப் பிரிவுகளில் பெருந்தோட்டத் துறை அமைந்துள்ளது. இந்தப் பிரதேச செயலக பெயர்ப் பட்டியலை, "ஆறுதல் (அஸ்வெசும)" என்ற நலன்புரித் திட்டத்துக்குப் பொறுப்பான நிதி இராஜாங்க அமைச்சுக்கும் இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி வழங்கவுள்ள உலக வங்கிக்கும் அனுப்பியுள்ளேன் என மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்ட மக்கள் என்பது நுவரெலியா மாவட்டத்தில் வாழும் மக்கள் மட்டுமல்ல. பொதுவாக நுவரெலியா முதல் கொழும்பின் அவிசாவளை, பாதுக்கை வரை 12 மாவட்டங்களில் பெருந்தோட்டங்கள் அமைந்துள்ளன. அதேவேளை, இந்த நலன்புரித் திட்டம் தோட்டத் தொழிலாளருக்கு மாத்திரம் வழங்கப்படும் ஒரு திட்டமும் அல்ல. ஆகவே, பெருந்தோட்டங்களில் எத்தனை பேர் தொழிலாளர்கள் என்ற கணக்கு இங்கே அவசியமில்லை.

இன்று பெருந்தோட்டங்களில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் தோட்டத்தொழிலாளர் அல்லர். ஆகவே, பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களை அவர்கள் அங்கே தொழில் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி வறுமை நிலைமையை மாத்திரம் கணக்கில் எடுத்து அவர்களை நலன்புரித் திட்டத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். நாட்டின் ஏனைய சமூக குடும்பங்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் எமது குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். எமது இந்த நிலைப்பாட்டை உலக வங்கியும் நிதி இராஜாங்க அமைச்சும் ஏற்றுக்கொண்டுள்ளன.

நாட்டின் வறுமை அதிகமான மாவட்டங்களில் மலையக மற்றும் பெருந்தோட்ட மக்கள் அதிகமாக வாழும் நுவரெலியா மாவட்டமே முதல் வரிசையில் உள்ளது. இந்நிலையில், இதுவரை சேகரிக்கப்பட்ட பெருந்தோட்டத் துறை சார்ந்த தரவுகளில் மாவட்டத்தின் பெருந்தோட்ட சனத்தொகை விகிதாசாரம் சரியாகப் பொருந்தவில்லை. நேற்றுமுன்தினம் நிதி இராஜாங்க அமைச்சில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் செஹான் சேமசிங்க எமக்கு வழங்கிய தரவுகளில் இருந்து இது தெரியவந்தது.

ஆகவே, நுவரெலியா மாவட்டத்திலேயே இன்னமும் விண்ணப்பிக்காத பெருந்தோட்ட மக்கள் இருக்கிறார்கள். அதேபோல்தான் ஏனைய மாவட்டங்களிலும் இந்நிலைமை நிலவுகிறது. இதை சரி செய்து நாட்டின் ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகள் போன்று எமது மக்களுக்கும் பாரபட்சமின்றி வழங்கப்படவேண்டும் என்பதற்காகவே தமிழ் முற்போக்குக் கூட்டணி போராடுகிறது. உலக வங்கி, நிதி அமைச்சு, ஜனாதிபதி ஆகிய தரப்புகளுடன் நாம் தொடர்ந்து பேசுகிறோம் என்பதைப் புரிந்துக்கொள்ளாமல் சம்பந்தப்பட்ட விடயத்தில் தெளிவும் இல்லாமல் இதுபற்றிப் பேசி இதை யாரும் குழப்பக் கூடாது.

இனி நாம் செய்யவேண்டியது பற்றிய தெளிவு இருக்க வேண்டும். நலன்புரி உதவிக்கு விண்ணப்பிக்க பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் வாய்ப்பு வேண்டும். 102 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள பெருந்தோட்டத்துறையில் இது நிகழ வேண்டும். ஒரு வீட்டில் வசிக்கும் திருமணமான வெவ்வேறு குடும்பங்களையும் வெவ்வேறாகக் கணக்கெடுக்க வேண்டும். வழங்கும் நிதியுதவி, பெறுநர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட வேண்டும். வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு அரசு வங்கிகளில் உடனடியாக விதிகளைத் தளர்த்தி கணக்குகளை ஆரம்பிக்க இடந்தர வேண்டும். ஆறுதல் (அஸ்வெசும)" என்ற நலன்புரித் திட்டத்தில் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு, அரசியல் கட்சிகளுக்கு, தொழிற்சங்கங்களுக்கு, தேவையின்றி தலையிட இடம் கொடுக்கக் கூடாது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஹப்புத்தளை ஆலயத்துக்கு நிதி



(நெல்லியடி நிருபர்)

ஹப்புத்தளை - தொட்டுலாகலை பிரதேசத்தில் அமைந்துள்ள் சிறி கதிர்வேலாயுத சுவாமி கோவில் கட்டட பணிக்காக 1,00,000 ரூபா தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இவ் உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தனது தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று ஆலய நிர்வாகிகளிடம் வழங்கிவைத்தார்.



**மொனராகலை கல்வி வலயத்துக் குட்பட்ட தென்னக்கும்புர தமிழ் வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடமொன்றுக்கு நேற்றுமுன்தினம் மாலை இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தால் வகுப்பறைக் கட்டடம் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. இதுதொடர்பான விசாரணைகளை நமுனுகுல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (படம்:நடராஜா மலர்வேந்தன்)**



# இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் கற்கைநெறிகள்

2023-24 கல்வியாண்டில் சுய நிதியிடல் திட்டத்தின்கீழ் MBBS, BDS, BE, B.Tech, B.Pharm, B.Arch ஆகியவற்றில் பட்டப்படிப்புகள், டிப்ளோமா மட்ட தொழில்நுட்ப கற்கைநெறிகள் மற்றும் மருந்தியல் டிப்ளோமா ஆகியவற்றுக்கு தகுதியான இலங்கை மாணவர்களிடமிருந்து (OCI அட்டை இல்லாதவர்கள்) கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

MBBS/BDS கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் 'நீட்' (NEET) பரீட்சையில் ஆகக்குறைந்தது 50 சதவீத புள்ளிகளையும் உயர் தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் தலா 50 வீதமான புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

அதேவேளை, BE/B.Tech மற்றும் பொறியியல் டிப்ளோமா கற்கைநெறிகளைத் தொடர விரும்புவோர் உயர் தரத்தில் கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் தலா 60 வீதமான புள்ளிகளையும் ஆங்கிலத்தில் 50 வீதமான புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டுமென்பது அவசியமானதாகும்.

அதேபோல,B.Pharmacy மற்றும் மருந்தியல் டிப்ளோமா கற்க விரும்புவோர் உயர் தரத்தில் பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களில் தலா 60 வீதமான புள்ளிகளையும் ஆங்கிலத்தில் 50 வீதமான புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

B.Arch கற்கையைத் தொடர விரும்புவோர், புதுடில்லி, கட்டடக்கலை சபையினால் குறித்துரைக்கப்பட்ட தகுதிகாண் உளச்சார்பு பரீட்சையில் சித்தியெய்த வேண்டும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள், வேலை நாட்களில் பி.ப. 2.00 முதல் பி.ப 4.00 (1400-1600hrs) மணி வரையான நேரத்தில், கொழும்பு - 3 இல் அமைந்துள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவில் இலங்கை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் பிறப்புச் சான்றிதழையும் காண்பித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தேவையான ஆவணங்களுடன் உயர் ஸ்தானிகராலயத்தால் ஜூன் 16ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (23.05.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 197.4736 | 209.3056 |
| கனேடியன் டொலர் | 220.0780 | 232.8001 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.6598 | 44.8307 |
| யூரோ | 321.8655 | 339.2152 |
| ஜப்பான் யென் | 2.1506 | 2.2612 |
| சிங்கப்பூர் டொலர் | 220.9156 | 233.3632 |
| ஸ்ரேலிங் பவுன் | 370.9780 | 389.7115 |
| சுவிஸ் பிராங்க் | 330.2590 | 350.0770 |
| ஐ.அ. டொலர் | 299.1941 | 312.3359 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 811.3411 |
| குவைட் | குவைட் தினார் | 995.4235 |
| ஓமான் | ஓமான் றியால் | 794.4618 |
| கட்டார் | கட்டார் றியால் | 83.9682 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.5690 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.2971 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.05.22
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5122 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,204,311.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 6 3 5 7 2 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3364 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,678,189.44
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 44 53 55 68

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1577 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,330,782.40
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 8 6 9 4 8 7

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1152 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,022,947.60
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 14 25 28 49

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 431 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,553,833.80
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 11 12 29 30 — விசேட இலக்கினம் கன்னி

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1470 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 322,777,070.00
ஆங்கில எழுத்து G — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 19 32 36 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# மன்னார் உயிலங்குளத்தில் இராணுவத்தால் பௌத்த விகாரை அமைக்க நடவடிக்கை

## குறித்த பகுதிக்கு சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. விஜயம்



மன்னார் நகர் நிருபர்

மன்னார் - உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவால் புதிதாக பௌத்த விகாரை அமைக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், குறித்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார் - உயிலங்குளம் பிரதேசத்தில் புதிதாக இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் (22) மதியம் குறித்த பகுதிக்கு விஜயம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பல பாகங்களிலும் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அதனடிப்படையில் மன்னார் - உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப்பிரிவால் அப்பகுதியில் புதிதாக ஒரு பௌத்த விகாரையை அமைக்க வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்விடயத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகளே காரணங்களாக உள்ளன. மன்னாரில் மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் போன்ற இடங்களில் 5 பௌத்த விகாரைகள் உள்ளன. ஆனால், இங்கே பௌத்த குடும்பங்கள் 50 கூட இல்லை.

பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த விடயத்தை உடனடியாக நான் புத்த சாசன அமைச்சரின் கவனத்திற்கும் மாவட்டத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

மக்களிடமிருந்து எனக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. குறித்த பிரதேசத்தில் இராணுவத்தால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேரடியாக குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன் – என்றார்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# மன்னார் கோர விபத்தில் ஓட்டோ சாரதி மரணம்; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் காயம்!




மன்னார் நகர் நிருபர்

மன்னார் பிரதான பாலத்திற்கருகில் நேற்று செவ்வாய்க்கிழமை (23) காலை 11 மணியளவில் மஹேந்திரா ரக வாகனம் மற்றும் முச்சக்கரவண்டி மோதி இடம்பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலத்த காயங்களுடன் மன்னார் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் முச்சக்கரவண்டிச் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்

குறித்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கணவன், மனைவி உட்பட 9 வயது, 6 வயது, 4 வயதுடைய மூன்று குழந்தைகள் உள்ளடங்கலாக ஐவர் இன்று இடம்பெறவுள்ள திருமண நிகழ்வு ஒன்றிற்காக முச்சக்கரவண்டி ஒன்றில் மன்னாருக்கு வருகை தந்த நிலையில், மன்னாரிலிருந்து தள்ளாடி நோக்கிப் பயணித்த மஹேந்திரா ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டியில் மோதியதில் முச்சக்கரவண்டி சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேநேரம், பலத்த காயங்களுடன் ஏனையோர் மன்னார் பொது வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# போதைக்கு அடிமையான யாழ். பல்கலை மாணவன் உள்ளிட்ட 17 பேர் கைது

யாழ். நிருபர்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவன் உள்ளிட்ட 17 பேர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனும் குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் போதைப்பொருள் வியாபாரிகள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவன் எனவும் தெரிவித்த பொலிஸார், கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

# நகை – பணம் திருடிய பெண் கைது

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, அச்செழு பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 18ஆம் திகதி அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தாலி, தாலிக்கொடி, மோதிரம் மற்றும் ஒருதொகைப் பணம் என்பன களவாடப்பட்டிருந்த நிலையில், இது குறித்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

இந்த விடயமானது காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (22) அச்செழு பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணொருவர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து, தாலி மற்றும் தாலிக்கொடியை விற்று வாங்கிய சங்கிலி மற்றும் தோடு, ஒருதொகைப் பணம், உருக்கிய நிலையிலான தங்கம் என்பன மீட்கப்பட்டன.

காங்கேசன்துறை மாவட்ட விஷேட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் அசேல வத்துக்காரவின் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட பெண் மீட்கப்பட்ட தங்கத்துடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் பராமரிப்பின்றிக் காணப்படும் காணிகள் தொடர்பாக அரச அதிபரின் முக்கிய அறிவித்தல்

மன்னார் நகர் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பராமரிப்பின்றிக் காணப்படும் காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை துப்புரவுசெய்து சுகாதாரத்துறையினருக்கு உதவி புரிய வேண்டும். அவ்வாறு உதவிசெய்ய முன்வராவிட்டால் காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (22) மாலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துச் சென்றுகொண்டிருக்கையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான அதாவது 5 மாதங்கள் முடிவடைந்த நிலையில், 61 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் ஆய்வுகளின் அடிப்படையில் நோயாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்களின் அடிப்படையில் மன்னார் பிரதேசத்தில் எமில் நகர், பெரியகமம், உப்புக்குளம், மூர் வீதி போன்ற இடங்கள் அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டு இவற்றுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 25, 26, 27 ஆகிய திகதிகளில் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

இதேவேளை, தனியார் காணிகள் பராமரிப்பின்றி வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டு அது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் காணி உரிமையாளர்களை சிலவேளைகளில் கண்டுபிடிப்பதில் கடினமாக இருப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளார்கள்.



ஆகவே, காணி உரிமையாளர்கள் இவ்வாறு வெற்றிடமாகக் காணப்படுகின்ற காணிகளை தூய்மைப்படுத்தி டெங்கு பரவலைத் தடுப்பதற்கு எமக்கு உதவ முன்வர வேண்டும்.

அவ்வாறு செய்யாத பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம்'' - என்றார்.





பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுள்ள பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த 100 இளநிலை பட்டதாரிகளுக்கு ஐக்கிய தொழிலாளர் முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவரும், கல்வி இராஜாங்க அமைச்சருமாகிய அ. அரவிந்தகுமாரின் ஏற்பாட்டில் சுவிட்சர்லாந்து நாட்டில் இயங்கும் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஊடாக அவர்களின் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யும் வரை மாதாந்தம் கொடுப்பனவு ஒன்றை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கான முதலாவது கொடுப்பனவு அண்மையில் பதுளை செனரத் பரண வித்தாரண மண்டபத்தில் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகர் வாமதேவன் தியாகேந்திரன், பெற்றோர்கள், மாணவர்களென பலர் கொண்டனர். (பதுளை செய்தியாளர்)

# மத்திய மலைநாட்டில் தொடரும் அடைமழை



மஸ்கெலியா செய்தியாளர்

மத்திய மலைநாட்டில் கடந்த சில நாட்களாக இடி, மின்னலுடன் கனத்த மழை பெய்து வருகிறது.

இதனால் மலையகப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இப்பகுதியில் உள்ள விவசாயிகளால் பயிரிடப்பட்ட விவசாயக் காணிகளில் வெள்ளநீர் புகுந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் இழப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, கன மழை காரணமாகவும் அட்டைக் கடி காரணமாகவும் நாளாந்தம் தேயிலைக் கொழுந்தை பறிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# நுவரெலியாவில் மகா கும்பாபிஷேகம்

ஆ.ரமேஸ்

நுவரெலியா ஒலிபண்ட் மேல் பிரிவு தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா இன்று காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ புண்ணியமூர்த்தி திருக்குமார் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. அத்துடன் பக்தர்களுக்கு பகல் மகேஸ்வர பூஜையுடன் அன்னதானமும் வழங்கிவைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்காணிப்பு கெமரா காட்சிகளை சாட்சியங்களாக பெற்றுக்கொடுக்கலாம்

## அதன் உரிமையாளர்கள் நீதிமன்றுக்கு அழைக்கப்படமாட்டார்களென பலாங்கொடை பொலிஸார் உறுதி

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பொதுநலன் கருதி குற்றச்செயல்களை அடையாளம் காண்பதற்காக பொதுமக்களின் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களிலிருந்து கண்காணிப்பு கெமராக் காட்சிகளை தைரியமாகப் பெற்றுக்கொடுக்குமாறு பலாங்கொடை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளதுடன் அவற்றின் உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட மாட்டார்கள் எனவும் உறுதியளித்துள்ளனர்.

பலாங்கொடை பொலிஸ் நிலையத்தினால் இந்த அறிவிப்பு பிரதேச பொதுமக்கள் மற்றும் வியாபார நி லையை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க இந்தக் கண்காணிப்புக் கெமரா சாட்சிகளை பாதுகாப்புத் துறைக்கு வழங்குவோர் எவ்வித காரணம் கொண்டும் சாட்சிகளாக நீதிமன்றத்திற்கு அழைக்கப்படமாட்டார்கள் என அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

1995/14 ஆம் இலக்க பாதுகாப்புச் சட்டத்துக்கிணங்க கண்காணிப்புக் கெமரா காட்சிகளை பாதுகாப்புத்துறை கேட்கும் போது அதனை மறுக்க முடியாது அதன் உரிமையாளர்கள் அதனை வழங்க சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காணாமல்போனவர் சடலமாக மீட்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொட பின்னவல பிரதேசத்தில் காணாமல் போன ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் சேருகங்க அராவ ஆற்றில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் கூட்டாக நடத்திய தேடுதல் நடவடிக்கையயடுத்து இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஒருவார காலத்துக்கு முன் பின்னவல நெல்லிவெல பிரதேசத்தைச் சேர்ந்த பிரபாகரன் சுப்ரமணியம் (65) என்பவர் காணாமல் போனதாக பின்னவல பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கிணங்க இவர் தேடப்பட்டு வந்தார்.

இவரது மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. திருமணமாகாத இவரின் சடலம் பலாங்கொடை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





மாத்தளை ஆமினா மகளிர் தேசிய கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு கல்லூரியின் புதிய அதிபர் ஜே.எஸ்.எம். பவாயிதா தலைமையில் மாத்தளை வலயக் கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் முஸ்லிம் பாடசாலைகளுக்கான இணைப்பதிகாரரி எம்.ஆர்.யூ.எம். ரிழ்வானின் நேரடி கண்காணிப்பில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: எம்.எம்.மஸாஹிம்)

# போராட்டக்காரர்கள் மீது தையிட்டியில் தாக்குதல்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்



**(கனகராசா சரவணன்)**

தமிழ்த் தாயகத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை அகற்றக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் கண்மூடித்தனமாக தாக்கி 9 பேரை கைது செய்த அராஜகத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் வடகிழக்கில் விகாரை அமைப்பு, காணி அபகரிப்புக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டம் தொடரும் எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரை திறக்கப்படவுள்ள நிலையில் அதனை அகற்றக் கோரி கட்சி பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் கட்சி உயர்பீட உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது பொலிஸார் அவர்களைத் தாக்கியதுடன் 9 பேரை கைதும் செய்தனர்.

உண்மையிலே இந்த நாட்டிலே ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் தாயகத்தில் விகாரைகள் முளைக்க ஆரம்பித்துள்ளது. கடந்தவாரம் திருகோணமலையில் முருகன் ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட புத்தர் சிலை வைக்க ஏற்பாடு செய்தனர். அதற்கு எதிராக மக்களுடன் ஒன்றிணைந்து போராடி அதனை தற்காலிகமாக தடுத்து வைத்திருக்கின்றோம்.அதேபோன்று வடக்கு கிழக்கில் விகாரை அமைப்பது மற்றும் காணி அபகரிப்பு செயற்பாடுகளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே தமிழர் தாயகத்தில் காணி அபகரிப்பு விகாரை அமைப்பது போன்றவற்றை முற்று முழுதாக எதிர்ப்போம் என்றும் தெரிவித்தார்.

# அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு ஓய்வூதியத்தை காலதாமதமின்றி செலுத்தவேண்டும்

## வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு







அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு உரிய ஓய்வூதியத்தை காலதாமதமின்றிச் செலுத்துவதற்கும் அது தொடர்பான வேலைத்திட்டம் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்திராராச்சி, ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

ஓய்வூதியம் பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதால் மக்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகக் குறிப்பிட்ட தலைவர், இது நீண்டகாலமாக நிலவிவரும் பிரச்சினை எனவும் இது தொடர்பில் அடிக்கடி முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாகவும் தெரிவித்தார்.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் அண்மையில் ஓய்வூதியத் திணைக்களம் அழைக்கப்பட்டிருந்தபோதே இந்த விடயம் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு மாதத்துக்குள் ஓய்வூதியத்தை வழங்க முடியுமென்று சுட்டிக்காட்டிய அதிகாரிகள், விண்ணப்பப் படிவம் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாமையால் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

ஓய்வூதியம் தொடர்பான தகவல்களை அறிய முறையான அமைப்பு இல்லாததால் ஓய்வூதியத் துறை குறித்து மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றம் நிலவுவதாக உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். எனவே, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு இலகுவாக சேவைகளை வழங்கக்கூடிய வகையில் இந்த முறைமை அமைக்கப்படவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். ஓய்வூதியம் தொடர்பில் ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பது தொடர்பிலும் குழுவின் உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கினர்.

அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சங்கங்களைக் குழு முன்னிலையில் அழைத்து அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வது சரியானது என்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, மொஹமட் முஸம்மில், குணதிலக ராஜபக்ஷ, மர்ஜான் பலீல், ராமேஸ்வரன், குமாரசிறி ரத்னாயக்க, கபில அத்துகோரள ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# பொது விவகாரங்களில் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கு எதிர்க்கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியம் விருப்பம்



பொது விவகாரங்களில் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கு எதிர்க்கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியம் விருப்பம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்றுமுன்தினம் (22) பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்க்கட்சியின் சர்வகட்சி ஒன்றியம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் சர்வகட்சி ஒன்றியத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பரவலாகக் கலந்துரையாடப்பட்டதோடு, பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டம் தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

# மேற்கு பெருநகர அபிவிருத்தித் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை



மேற்கு பெருநகர அபிவிருத்தித் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இத்திட்டத்தின் இறுதி மதிப்பாய்வுக்குப் பிறகு அடுத்தகட்டப் பணிகளை 3 மாதங்களுக்குள் மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேற்குப் பெருநகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (22) நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.இதன்போதே அமைச்சர் அதிகாரிகளுக்கு மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் அண்மையில் நடத்திய சந்திப்பின்போது மேற்குப் பெருநகர அபிவிருத்தித் திட்டத்தை மீள அமுல்படுத்துவதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்திருந்தார். அதன்படி, இது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தக் கலந்துரையாடலை நடத்தினார்.

மேற்கு பெருநகர அபிவிருத்தித் திட்டம் 2016இல் தயாரிக்கப்பட்டது. இது சிங்கப்பூர் நகர வடிவமைப்பு நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய 3 மாவட்டங்களுக்காக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் இந்த மாவட்டங்கள் பொருளாதார, வணிக, கலாசார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக அபிவிருத்தி செய்யப்படும்.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் தற்போதைய பொருளாதார நிலைமைக்கேற்றவாறு இந்த அபிவிருத்தித் திட்டத்தை மேம்படுத்தி அதன் இறுதி மீளாய்வை அடுத்த மாதத்துக்குள் விரைவில் மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கினார். இந்த நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்த அபிவிருத்தித் திட்டத்தை வர்த்தமானி மூலம் வெளியிடும்.

இத்திட்டத்தின் கீழ் மீரிகம மற்றும் ஹொரணை கைத்தொழில் நகரங்களாகவும் மாலபே மற்றும் ஹோமாகம தொழில்நுட்ப நகரங்களாகவும் பதுரலிய மற்றும் அவிசாவளை பெருந்தோட்ட நகரங்களாகவும் நீர்கொழும்பு மற்றும் வத்தளை கரையோர சுற்றுலா நகரங்களாகவும் கட்டான மற்றும் கட்டுநாயக்க போக்குவரத்து மற்றும் விமான நகரங்களாகவும் கஸ்பேவ சொகுசு வீட்டு நகரங்களாகவும் முத்துராஜவெல சுற்றுச்சூழல் வலய நகரங்களாகவும் கொழும்பு வர்த்தக நகரமாகவும் ஸ்ரீ ஜயவர்தனபுர நிர்வாக நகரமாகவும் அபிவிருத்தி செய்யப்படும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா, மேலதிக செயலாளர் (வீடமைப்பு) டபிள்யூ. எம். ஆனந்த, உதவிச் செயலாளர் (நகர அபிவிருத்தி) டபிள்யூ. பி. யு. காவிந்யா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல் வலயம் 2) லலித் விஜயரத்ன மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சுல்தான் முஹியித்தீன் ஆலிமின் மறைவு சமூகத்துக்கு பேரிழப்பாகும்

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி.அனுதாபம்

**(பேருவளை செய்தியாளர்)**

இலங்கையில் மூத்த சன்மார்க்க அறிஞர்களுள் ஒருவரான கலீபதுஷ்ஷாதுலி மௌலவி சுல்தான் ஏ.முஹியித்தீன் ஆலிம் (பஹ்ஜி)யின் திடீர் மறைவு சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

கலீபதுஷ்ஷாதுலி மௌலவி சுல்தான் ஏ.முஹியித்தீன் ஆலிம் (பஹ்ஜி) யின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மௌலவி சுல்தான் ஏ.முஹியித்தீன் ஆலிமின் மறைவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன்.தென்னிலங்கையின் புகழ்பெற்ற அரபுக் கல்லூரியான முர்ஸியாவின் அதிபராக தனது கடைசி மூச்சு வரை பதவி வகித்து சன்மார்க்கப் பணிகளைச் செய்ததோடு ஷாதுலியா தரீக்காவின் கலீபாவாகவும் பதவி வகித்து தரீக்காவின் வளர்ச்சிக்கும் மகத்தான பணி செய்துள்ளார்.

மிகவும் அமைதியான சுபாவம் கொண்ட இவரிடம் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை கண்டு கொள்ளக் கிடைத்தது.முர்ஸியாவை சிறப்பாக வழி நடத்துவதில் மிகவும் தியாகத்துடன் உழைத்தார்.எத்தகைய சவால்களையும் நெருக்கடி மிக்க சூழ்நிலைகளையும் மிகவும் அமைதியாக -பொறுமையாகக் கையாளும் ஆற்றலும் ஆளுமையும் அவரிடம் காணப்பட்டது.

சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருடனும் நன்றாகப் பழகக்கூடியவராகக் காணப்பட்டார்.சிறந்த ஆளுமையுள்ள ஒரு சன்மார்க்க அறிஞராக இருந்தபோதிலும் அதை பெரிதாக காட்டிக் கொள்ளாமல் மிக அமைதியாக சமூகத்தின் மறுமலர்ச்சிக்காக செயற்பட்டார். என்னுடனும் எனது தந்தையுடனும் மிக அன்பாக அவர் நடந்து கொண்டார்.

இந்த அறிஞரின் பல தசாப்த கால இஸ்லாமிய சன்மார்க்கப் பணிகளையும் ஷாதுலிய்யாத் தரீக்காவின் முன்னேற்றத்துக்காக ஆற்றிய சேவைகளையும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஏற்றுக்கொண்டு அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனம் கிடைக்க இறைவனை வேண்டுகிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

# சங்கானைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்





யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவிவருகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம், சங்கானைப் பகுதியில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கிணங்க சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஜே-179 ,ஜே-181 கிராமசேவகர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச்சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர்.

# கொழும்பு கதிரேசனில் நினைவேந்தலும் பரிசளிப்பும்









**(எம்.நசார்)**

புதிய அலை கலை வட்டம் நடத்திய சமகாலத்தில் தமிழ் கலைத்துறையை விட்டு மறைந்த பிரபல நடிகை பிரியா ஜெயந்தி, நடிகர் சந்திரசேகரன், இசையமைப்பாளர் எம். எஸ். செல்வராஜ், திரைப்பட நடிகர் தர்ஷன் தர்மராஜ், பிரபல ஹிந்தி பாடகர் டோனி ஹசன் மற்றும் எழுத்தாளர் அனிஸ்டஸ் ஜெயராஜ் ஆகியோரை நினைவுகூரும் நிகழ்வும் எவோட்ஸ்-2023 கலை, கலாசார போட்டித் தொடரில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் புதிய அலை கலை வட்டத்தின் தலைவர் ராதா மேத்தா தலைமையில் இடம்பெற்றது.

கொழும்பு-13, கதிரேசன் மணிமண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இந்நிகழ்வில் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பத்திரிகை ஆசிரியர் செந்தில் வேலவர், ராதா மேத்தா ஆகியோர் மேற்குறித்த கலைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் ஜே.பி.ஜெயராம், ஆர்.வைத்திமாநிதி, ஜோசப் பெர்னாண்டோ மற்றும் கலைஞர்கள் கலந்து கொண்டனர். இதன்போது எவோட்ஸ்-2023 கலை, கலாசாரப் போட்டித் தொடரில் கவிதை, சிறுகதை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அதிதிகளினால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# போதைப் பொருளுடன் பெண்ணொருவர் கைது

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த 28 வயதுடைய பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்து 50 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர் .

இதன்போது கைதுசெய்யப்பட்டவர் ஏற்கனவே ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு நான்கு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர் எனவும் கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு தற்பொழுது சிறைவாசம் அனுபவித்து வருவதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் விசாரணையின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

# கிராமங்கள் தோறும் கல்வி அபிவிருத்தி குழுக்கள் நிறுவப்பட வேண்டும்

## மேல் மாகாண முன்னாள் உறுப்பினர் அம்ஜாத்;



**( பேருவளை செய்தியாளர்)**

எமது சமூகத்தின் கல்வித்துறை மேம்படுத்தப்படவேண்டும்.அதற்காக கிராமங்கள் தோறும் கல்வி அபிவிருத்திக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத் கூறினார்.

பாணந்துறை, ஹேனமுல்லை ஜீனியஸ்பார்க் தனியார் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் மொரட்டுவை, எகொட உயன அறபாத் முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் கடந்த (21) ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இன்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முதல் சாதாரண தரம், உயர்தரம் உள்ளிட்ட சகல பரீட்சைகளிலும் தேர்ச்சி பெறுவதற்கு பிரத்தியேக வகுப்புகளை நாடத் தவறினால் எதிர்பார்ப்புகள் வெறும் கனவாகவே அமையும். எல்லா மாணவர்களாலும் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லவும் முடியாது. எனவே, எமது சமூகம் கல்வியை தொடர்வதிலுள்ள இடர்பாடுகளை சமாளிக்க கிராமங்கள் தோறும் கல்வி அபிவிருத்திக் குழுக்கள் அமையப் பெற வேண்டும். அதன் மூலமே கல்வியில் வளர்ச்சி கண்டு தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

இதன்போது புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 70 க்கு மேல் புள்ளிகளைப்பெற்ற சகல மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# தூரப்பிரதேச பாடசாலைகளில் பணியாற்றும் கர்ப்பிணி ஆசிரியைகளுக்கு இடமாற்றம்

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் கிழக்கு மாகாண கல்வி அதிகாரிகளுக்கு பணிப்பு






(கிண்ணியா செய்தியாளர்)

கிழக்கு மாகாண தூரப் பிரதேச பாடசாலைகளில் பணியாற்றும் கர்ப்பிணி ஆசிரியைகளுக்கு அருகிலிருக்கும் பாடசாலைகளில் பணியாற்ற வசதிகளை மேற்கொள்ளவும் 52வீதத்துக்கும் குறைந்த மதிப்பெண்களைக் கொண்ட கல்வி வலயங்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான முன்மொழிவுகளை 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கவும் கிழக்கு மகாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வித்துறை முன்னேற்றம் குறித்து மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வியமைச்சின் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வி வலயப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச கல்வி அதிகாரிகள் ஆகியோருடனான கலந்துரையாடல், திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் திங்கட்கிழமை(22) இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

மேலும், நிலுவையில் உள்ள அனைத்து குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை 30 நாட்களுக்குள் மேற்கொள்ளவும் நிதிக் குற்றங்கள், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பிற அங்கீகரிக்கப்படாத நடைமுறைகள் குறித்த அறிக்கைகளை ஒப்படைத்து கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுதல், உட்கட்டமைப்பு வசதிகள் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளின் பட்டியல்களை தயாரித்தல், பாடசாலையை அண்மித்த இடங்களை போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்காக விசேட கவனம் செலுத்துவதற்காக விசேட குழு நியமனம், மாணவர்களின் இடைவிலகல்களை தவிர்ப்பதற்காக விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்படல், பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் கல்வித்திறனை விருத்தி செய்வதற்கு தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளுதல் போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் உரிய அதிகாரிகளிடத்தில் மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளராக மஜீத் கடமையேற்பு

(மாளிகைக்காடு செய்தியாளர்)



சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக அண்மையில் பதவியுயர்வு பெற்று கடமையாற்றிய றியாத் ஏ.மஜீத் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளராக நியமனம் பெற்று கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு திங்கட்கிழமை(22) சமுர்த்தி வங்கிச் சங்க காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் முகாமைத்துவப் பணிப் பாளர் ஏ.எல்.யூ.ஜுனைதா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.ஹிதாயா, உதவி முகாமையாளர் எம்.யூ.ஹில்மி, வலய உதவி முகாமையாளர் எம்.எஸ்.எம்.நௌஷாட், கருத்திட்ட உதவியாளர் எம்.எம்.எம். முபாறக், பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.சம்சுதீன், செயலாளர் எம்.முபிதா, முன்னாள் தலைவர் ஏ.எம்.அலாவுதீன் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது சமுர்த்தி வலயத்தின் உதவி முகாமையாளராக 5 வருடங்கள் கடமையாற்றியுள்ள இவர், சாய்ந்தமருது சமுர்த்தி மகா சங்கத்தின் உதவி முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டு 7 மாதங்கள் கடமையாற்றியுள்ளார்.

அண்மையில் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக பதவியுயர்வு பெற்று கடமையாற்றி வந்த நிலையில், சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளராக றியாத் ஏ.மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிலோன் மீடியா போரம் ஊடக அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதே சமயம் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளராக கடமையாற்றிய எஸ்.றிபாயா சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

# பாசிக்குடா கடற்கரை அருகில் ஆபத்தான கிணறு

## அகற்றுமாறு சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை



(மீராவோடை செய்தியாளர்)

இலங்கையில் சுற்றுலாத்துறைக்கு பெயர்ப்போன இடமாகவுள்ள பாசிக்குடா கடற்கரையோரம் அமைந்துள்ள பெரிய கிணறு ஒன்றினால் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அச்சம் கொள்கின்றனர்.

பல வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்ட இக் கிணறு உயரம் குறைவான நிலையில் காணப்படுகிறது. இதனால், அங்கு வரும் சிறுவர்கள் கிணற்றின் அருகில் செல்வதும், அதனை எட்டிப் பார்ப்பதுமாக உள்ளனர். இதனால், சிறுவர்கள் தவறி விழுந்து விடுவார்களோ என்ற அச்சம் நிலவுகின்றது.

எனவே, பாதுகாப்பற்ற வகையில் அமைந்துள்ள குறித்த கிணற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து புனர்நிர்மாணம் அல்லது மூடிவிடுமாறு சுற்றுலாப் பயணிகள் கேட்டுக்கொள்கின்றனர்.







கல்விமாணி பட்டதாரிகள் 55பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்றது. கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார். அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பீ.எஸ்.ரத்நாயக்க, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபாலரத்னம் உள்ளிட்ட பல அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். (அப்துல்சலாம் யாசீம்)





மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்ட டெங்கு விழிப்புணர்வு சிரமதானம் திங்கட்கிழமை(22) முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பிரதான வீதி இரு மருங்கிலும் காணப்பட்ட வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள், தகர ரின்கள், சிரட்டைகள் உள்ளிட்ட பொருட்கள் துப்புரவு செய்யப்பட்டன. இதன்போது டெங்கு நோய்த் தாக்கம் தொடர்பில் பொது மக்களுக்கு ஒலிபெருக்கி மூலமாக பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது. (மட்டக்களப்பு செய்தியாளர்)





இலவச ஆயுர்வேத வைத்திய மருத்துவ முகாம் மட்டக்களப்பு குருக்கள்மடம் பொதுநூலகத்தில் ஆயுர்வேத வைத்தியர் க.விஸ்வலிங்கம் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது. இதனை கலைவாணி வாசகர் வட்டத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். தலைவர் சி.விவேகானந்தம் மற்றும் கிராம பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டு வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுச்சென்றனர். (சோபிதன்)



ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் கல்முனை மஸ்ஜிதுல் றைஹான் பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான குவைத் தூதரக செயலாளர் அஷ்-ஷெய்க் முஹம்மட் பிர்தௌஸி, அதன் நிர்வாகிகளுடன் பள்ளிவாசல் கட்டுமானம் தொடர்பில் கலந்துரையாடினார். இதன்போது மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (சாய்ந்தமருது செய்தியாளர்)

### திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஹபாயா விவகாரம்

# நல்லெண்ண அடிப்படையில் வழக்குகளை இணக்கமாக முடித்துக்கொள்ளத் தீர்மானம்

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஹபாயா விவகாரத்தில் நல்லெண்ண அடிப்படையில் வழக்குகளை இணக்கமாக முடித்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் இச்சம்பவத்தோடு தொடர்புபட்ட 03 வழக்குகளும் திங்கட்கிழமை(22) முடிவுக்கு கொண்டு வரப்பட்டன.

அதனடிப்படையில், திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு தமது கலாசார ஆடையான ஹபாயாவை அணிந்து கொண்டு கடமையேற்கச் சென்ற ஆசிரியை பஹ்மிதா றமீஸை கடமையேற்க விடாமல் தடுத்தமை தொடர்பில் பாடசாலை அதிபர் திருமதி லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிர்காலத்தில் ஹபாயா ஆடை தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் நல்லெண்ண அடிப்படையில் வழக்குகளை இணக்கமாக முடித்துக்கொள்ள விரும்புவதாகவும் சண்முகா வித்தியாலய அதிபர் தரப்பானது திறந்த நீதிமன்றில் முன்மொழிந்திருந்தது.



இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஆசிரியையோடு கலந்தாலோசித்த ஆசிரியையின் சட்டத்தரணிகள் பின்வரும் நிபந்தனைகளை அதிபரும் பாடசாலை சமூகமும் ஏற்பின் இணக்கமொன்றுக்கு வர சாத்தியமிருப்பதாக கூறி அதனை நீதிமன்ற வழக்கேட்டிலும் பதிவு செய்திருந்தனர்.

1) இனி எக்காலத்திலும் சண்முகா கல்லூரிக்கு கற்பிக்கச் செல்கின்ற முஸ்லிம் ஆசிரியைகள் தமது ஆடையாக ஹபாயாவை அணிவதற்கு தன்னாலோ தனது பாடசாலை சமூகத்தாலோ எவ்வித தடங்கல்களும் ஏற்படுத்தப்பட மாட்டாது என்று பாடசாலை அதிபர் வெளிப்படையாக உத்தரவாதமளிக்க வேண்டும்.

2) 05 வருடங்களாக ஆசிரியை பஹ்மிதா றமீஸூக்கு வழங்கப்படாமல் தடுக்கப்பட்டிருக்கின்ற சம்பள உயர்வு, பதவி உயர்வு என்பவற்றை பெறுவதற்கான வருடாந்த மீளாய்வு படிவம் உட்பட அனைத்து ஆவணங்களையும் சண்முகா வித்தியாலய அதிபர் உடனே கையெழுத்திட்டு வழங்க வேண்டும்.

3) ஆசிரியை பஹ்மிதா சண்முகா வித்தியாலயத்துக்கு மீளவும் முறையாக நியமனம் பெறுகின்ற விடத்து ஹபாயா ஆடையுடன் தனது ஆசிரிய கடமைகளை மேற்கொள்ள எவ்வித ஆட்சேபனைகளையும் தனக்கு இல்லையென்ற உத்தரவாதத்தினை இந்நீதிமன்றில் அளிக்க வேண்டும்.

4) ஆசிரியை பஹ்மிதாவுக்கு ஏற்படுத்தப்பட்ட தீங்குகள் தொடர்பில் தமது மனவருத்தத்தினை மன்றில் வெளிப்படையாக பதிவு செய்ய வேண்டும்.

பாடசாலை அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்நிபந்தனைகளை உள்வாங்கி தனது சமர்ப்பணத்தினை செய்ததுடன் அதில் விசேடமாக இலங்கையில் முஸ்லிம் ஆசிரியைகள் தங்களது கலாசார ஆடையான ஹபாயாவை அணிவதற்கு சட்டரீதியாக அவர்களுக்கு உரிமையுள்ளது என்பதனை ஏற்றுக்கொண்டிருந்தார்.

அவர் தனது சமர்ப்பணத்தில் இன்றிருக்கின்ற சட்டத்திட்டங்களுக்கு அமைவாக எவரும் ஹபாயா அணிந்து வருவதற்கான உரிமை உண்டு என்பதையும் நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம். அதில் எந்தவிதமான தயக்கமோ, பின்வாங்கலோ கிடையாது என்று கூறி அதனை வழக்கேட்டிலும் பதிவு செய்திருந்தார்.

மேலும் அன்றைய சம்பவம் கல்லூரி வளாகத்தில் நடந்திருப்பது வருந்தத்தக்க விடயம் என்றும் இவ்வழக்கு இணக்கமாக தீர்க்கப்படுமிடத்து பஹ்மிதா ஆசிரியை தனது சம்பள உயர்வுக்கான ஆவணங்களை சமர்ப்பிக்குமிடத்து அவற்றுக்கு உடனடியாக சிபாரிசு கொடுக்கப்படும் என்ற உறுதிமொழியையும் அதிபர் சார்பாக வழங்கியிருந்தார்.

இவ்விரு சமர்ப்பணங்களையும் பதிவுசெய்த நீதிமன்றம் அவற்றையேற்று தனது கட்டளையினை ஆக்கியதுடன் அவற்றின் அடிப்படையில் இச்சம்பவத்தோடு தொடர்புபட்ட 03 வழக்குகளும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன.

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட ஆசிரியை பஹ்மிதா சார்பில் சட்டத்தரணி ஏ.எம்.சாதிர் அறிவுறுத்தலின் பேரில் குரல்கள் இயக்க சட்டத்தரணிகளான ஹஸ்ஸான் றுஷ்தி, றதீப் அகமட் மற்றும் எம்.எம்.ஏ.சுபாயிர் ஆகியோர் ஆஜராகியிருந்ததுடன் தவிசாளர் சட்டமாணி றாஸி முகம்மத் ஆகியோர் மன்றில் பிரசன்னமாயிருந்தார்.

# குரங்குத் தொல்லையை கட்டுப்படுத்துமாறு அம்பாறை மாவட்ட மக்கள் கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள், விவசாயிகள், பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் தினந்தோறும் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

தினமும் கொத்தணியாக 300இற்கும் மேற்பட்ட குரங்குகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடமாடி வருகின்றன. இக் குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுமக்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட சவளக்கடை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, மருதமுனை, சேனைக்குடியிருப்பு, மணற்சேனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, மத்தியமுகாம், சொறிக்கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அட்டப்பளம், ஒலுவில், வளத்தாபிட்டி, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில், இறக்காமம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட நெற்களை சேதப்படுத்துவதும் வியாபாரக் கடைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களை நாசப்படுத்தி விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பழங்களையும் உண்டு வீணாக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தவிர, இம்மாவட்டத்தில் வீதிகளில்



செல்கின்ற பாதசாரிகள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்தை இக்குரங்குகள் வீதியின் நடுவில் சஞ்சாரம் செய்து தடுத்து வருகின்ற அதேவேளை, பல விபத்துகளும் ஏற்பட்டுள்ளன.

மேலும் இப்பிரதேச மக்கள் பொருட்களை எடுத்துச்செல்லும்போது கைகளில் உள்ள உணவுப் பொதிகளைப் பிடுங்குவதாகவும் இதன் காரணமாக இப்பகுதி மக்கள் பல இடர்களைச் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, குரங்குகளின் அட்டகாசத்தால் பல பகுதிகளில் உள்ள மாணவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடர்கின்றனர். அத்தோடு, வீடுகளில் உடைகளை வெளியில் உலரவிடும் சந்தர்ப்பத்தில் குரங்குகள் அவற்றைக் கொண்டுசெல்வதால் பாடசாலை மாணவர்கள் உட்பட வீட்டில் உள்ள பெரியவர்களும் பல சிரமங்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென குறித்த பிரதேச மக்கள் கேட்டுக்கொள்வதுடன் இம்மாவட்டத்தில் குரங்குகளின் தொடர் அட்டகாசத்தால் பொறுமையிழந்த பல விவசாயிகள் விவசாயத்தை கைவிட்ட சந்தர்ப்பமும் காணப்படுகிறது.

மேலும், ஒவ்வொரு வருடமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மில்லியன் கணக்கான ரூபாக்கள் குரங்குகளினால் வீணாவதுடன் பல விவசாய நிலங்கள் குரங்குகளின் நடமாட்டம், தொல்லை காரணமாக தரிசாக மாறியுள்ளன. இங்கு குரங்குகள் விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை உண்பதுடன் அதை முழுவதுமாக வீணாக்குவதும் இதற்கு பிரதான காரணமாக அமைகிறது.

அதுமாத்திரமன்றி நகரங்களில் முறையாக அகற்றப்படாத திண்மக்கழிவுகளை உண்டு அதிக எண்ணிக்கையில் குரங்குகள் பெருகி வருகின்றன. இதனால் விவசாய நிலத்தைப் பாதுகாப்பது சிரமமாக உள்ளதால் சில விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளையும் கைவிட்டுள்ளனர். மேலும், வீதியோரங்களில் மட்டுமல்லாமல், சில சமயம் ஊருக்குள்ளும் குரங்குகள் வந்துவிடுகின்றன. எனவே, இப்பகுதி மக்களின் பாதுகாப்பு நலன்கருதி பொலிஸ் நிலையம் மற்றும் வன அதிகாரிகள் உரிய நடவடிக்கையை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# முஸ்லிம் திருமணச் சட்டதிருத்த முயற்சிக்கு ஒத்துழைக்க வேண்டாம்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் முஸ்லிம் எம்.பிக்களிடம் கோரிக்கை

(பாறுக் ஷிஹான், மாளிகைக்காடு செய்தியாளர்)



முஸ்லிம் திருமணச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் எத்தகைய முயற்சிகளுக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டாம் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அக்கட்சி அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

முஸ்லிம் திருமணச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் இருபது பெண்களை நீதியமைச்சர் அழைத்து அவர்களது கோரிக்கையை ஏற்கவேண்டும் என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நாட்டில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் வாழும்போது வெறும் இருபது பெண்களின் கோரிக்கைக்கு பின்னால் நீதியமைச்சர் செல்வதன் மூலம் இதன் பின்னணியில் சியோனிஸம் இருக்கிறதா என்ற சந்தேகத்தைத் தருகிறது.

சில வருடங்களுக்கு முன் முஸ்லிம் திருமணச் சட்டத்தை திருத்தவேண்டுமென கோரிக்கை விடுத்த முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவர் தனது திருமணத்தை விவாகரத்துச் செய்துவிட்டு தற்போது ஐரோப்பாவில் திருமணத்துக்கப்பாலான உறவில் வாழ்வதையும் அதை பெருமையாக சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதையும் காண்கிறோம்.

முஸ்லிம் திருமணச் சட்டத்தை மாற்றும் கோரிக்கைகளுக்கு பின்னால் ஐரோப்பிய சக்திகள் உள்ளன. இவ்வாறு கோரிக்கை விடுவோரில் சிலரை ஐரோப்பிய நாடுகளின் அரசசார்பற்ற நிறுவனங்கள் அழைத்து சலுகைகளை வழங்குவதன் மூலம் இவை தெளிவாகிறது.

இந்நிலையில், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் பத்து வருடங்களாக பாராளுமன்றில் உண்டும் உறங்கியும் வாழ்ந்து சமூகத்தின் எந்தவொரு உரிமையையும் பெற்றுத்தர வக்கில்லாதவர்களாக இருக்கும் நிலையில் எமது மூதாதையர் பெற்றுத்தந்த முஸ்லிம் திருமணச் சட்டத்தில் கை வைத்து அதனை எதிர்காலத்தில் இல்லாமல் செய்யும் துரோகத்துக்கு ஒத்துழைக்க வேண்டாம் எனக் கோருகின்றோம்.

முஸ்லிம் திருமணச் சட்டத்தில் கைவைக்க முயன்ற கோட்டாபய ராஜபக்ஷ மிகக் கேவலமாக நாட்டை விட்டுத் தப்பியோடியதைக் கண்டோம். அதேபோல் முஸ்லிம் திருமணச் சட்டத்தில் ஜம்இய்யத்துல் உலமாவின் ஏகோபித்த அனுமதியின்றி திருத்தம் கொண்டுவர முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயன்றால் நிச்சயம் அவர்களுக்கும் இறை தண்டனை கிடைக்கும் என்பதுடன் எதிர்கால நமது சந்ததிகள் சபிப்பார்கள் என்றும் எச்சரிக்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கந்தளாய் புகையிரத நிலையத்தில் பழுதடைந்த கணினி இயந்திரம்

## திருத்தித்தருமாறு பயணிகள் கோரிக்கை

(கந்தளாய் செய்தியாளர்)

கந்தளாயிலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கென புகையிரத ஆசனம் முற்பதிவு செய்யச் சென்றால் அங்குள்ள கணினி இயந்திரம் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாக பழுதடைந்துள்ள இவ்வியந்திரம் இன்னமும் சரிசெய்யப்படாததால் தம்பலகாமம் அல்லது திருகோணமலைக்குச் செல்லுமாறு பொறுப்பற்ற விதத்தில் புகையிரத அதிபர் பதிலளிக்கின்றார்.

இதனால் வான்எல, கந்தளாய், பேராறு, அக்போபுர மற்றும் வாத்தியாகம போன்ற பகுதிகளிலிருந்து கொழும்புக்குச் செல்கின்ற பயணிகள் ஆசனங்களை முற்பதிவு செய்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். புகையிரத முற்பதிவுகளை மேற்கொள்வதாக இருந்தால் நாற்பது கிலோமீற்றர் தாண்டி திருகோணமலைக்குச் செல்ல வேண்டும். இதனால் பல ரூபாக்களை செலவு செய்து செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் பொது மக்களின் நலன்கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றனர்.

# யானை தாக்கி வயோதிபர் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானை தாக்கி வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை(23) அதிகாலை இடம்பெற்றுள்ளது. வீட்டிலிருந்து இவர் வயலுக்குச் சென்றுகொண்டிருந்தபோது யானை தாக்கிய நிலையில், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கோமரங்கடவல அடம்பன பகுதியைச் சேர்ந்த அக்குறாலகே செனவிரத்ன (65வயது) என்பவராவார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த ஒரு மாதத்துக்குள் நான்கு பேர் யானை தாக்கி குறித்த பிரதேசத்தில் உயிரிழந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தற்போது காட்டு யானையின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் பழக்கடைகளில் திடீர் சோதனை நடவடிக்கை



(மாளிகைக்காடு செய்தியாளர், பாருக் ஷிஹான்)

நிந்தவூர் பழக்கடைகளின் தரத்தைப் பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் அனைத்து பழக்கடைகளிலும் பரிசோதனை நடவடிக்கை திங்கட்கிழமை(22) மேற்கொள்ளப்பட்டது.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்.றயீஸின் வழிகாட்டலில் இடம்பெற்ற பரிசோதனை நடவடிக்கையில் மக்களின் நுகர்வுக்கு பொருத்தமற்ற பழங்கள் மற்றும் செயற்கையாக பழங்களை பழுக்க வைப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய இரசாயனங்களும் கைப்பற்றப்பட்டு அனைத்தும் அழிக்கப்பட்டன.

இவ்வாறு பழங்களை செயற்கையாக பழுக்கவைக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனம் கலந்து தெளிக்கப்பட்ட பழங்களை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அதன் இரசாயனத் தாக்கத்தின் விளைவுகளை அறியாமல் உட்கொண்டு பல நோய்களுக்குள்ளாகின்றனர். எனவே, இதனைத் தடுக்கும் பொருட்டு இவ்வாறு இரசாயனம் கலந்து தெளிப்பதனையும் இரசாயனம் தெளிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய உபகரணங்களையும் மற்றும் அழுகிய நிலையில் உள்ள பழங்களையும் கண்டால் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் சுகாதார வைத்திய அதிகாரியைத் தொடர்புகொண்டு தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களும் இப்பரிசோதனை நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.

## போடியார் புலம்பல்!



**ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் தானும் போட்டியிடப்போவதாக நல்லாட்சி கால ஜனாதிபதி மைத்திரி சொல்லியிருக்காரு எலுவா? ஜனாதிபதித் தேர்தலில் தோக்கிறத்துக்கும் ஆள்தேவைதானே எண்டத நம்மட சிவாலிங்கத்துக்கு அடுத்தபடியா இவருதான் போல? சிவாஜிலங்கமும் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலையும் ஆளும்கட்சி ஆக்களால இறக்கப்படுற ஜோக்கர் வேட்பாளரப்போல இந்தத் தடவ அடுத்த ஜோக்கராக மைத்திரியையும் அந்தப் பட்டியலில நிச்சயம் இடம்பிடிக்கறது தப்பாது!**

# கந்தளாய் பிரதேச பொதுப்பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல்



(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை மாவட்ட கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவு மக்கள் எதிர்நோக்கும் மற்றும் பாதிக்கப்படுகின்ற பொதுவான பிரச்சினைகளைக் கண்டறிந்து ஊடகங்களூடாக வெளிப்படுத்தும் நோக்கில் ஐந்து சிவில் அமைப்புகளை மையமாகக் கொண்ட கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நுகசெவன ஹோட்டலில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பெண்கள், விவசாயிகள், சமூகக் குழுக்கள், கிராம மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது யானை - மனித மோதல், குடிநீர்ப் பிரச்சினை, விவசாயப் பிரச்சினை, ஊட்டச்சத்துக் குறைபாடு, சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், திருகோணமலை மாவட்ட கங்கத் தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகர் ஆர்.ஜி.தர்மதாச, அதன் தலைவர் அமதோர அமர்ஜீவ, செயலாளர் உபாலி மனுசங்க காரியவசம், பொருளாளர் பாருக் முபாரக் ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டதுடன் எழுத்தணி கலைப்பேரவை பூரண ஆதரவை வழங்கியது.

கலைப்பேரவையின் தலைவர் வடமலை ராஜ்குமார், பொருளாளர் அரசரத்தினம் அச்சுதன் போன்றோரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

# இளைஞர்கள் உட்பட மூவர் போதைப்பொருளுடன் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - ரொட்டவெவ பகுதியில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் இரு இளைஞர்கள் உட்பட பெண்ணொருவரை திங்கட்கிழமை (22) இரவு கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து ரொட்டவெவ கிராமத்துக்கு ஹெரோயின் போதைப் பொருளை விற்பனைக்காக மோட்டார் சைக்கிளில் இருவர் கொண்டு செல்வதாக மொரவெவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாகவே மோட்டார் சைக்கிளை சோதனையிடுவதற்காக நிறுத்தியபோது குறித்த நபர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் பயணித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை சோதனையிட்டதுடன் குறித்த இளைஞர்களையும் சோதனையிட்டபோது இளைஞர் ஒருவரின் மலவாயிலுக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் 07 பக்கெட் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலை ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த பைசர் ஹஸாத் (23வயது) மற்றும் திருகோணமலை பாலையூற்றுப் பகுதியைச் சேர்ந்த நவாஸ் ரஹ்மான் (23வயது) எனத் தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் விசாரணைகளின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, கஞ்சா போதைப்பொருளை விற்பனைக்காக தாம் அணிந்திருந்த ஆடைக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த ஜமால்தீன் நிரோஷா (33வயது) என்ற பெண்ணொருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் ஏற்கனவே பல குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர் எனவும் குறித்த பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட குறித்த இரு சந்தேக நபர்களிடம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# பெருந்தொகையான டைனமைட் குச்சிகள் மீட்பு



(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பெருந்தொகையான டைனமைட் குச்சிகளை திங்கட்கிழமை(22) மாலை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேகத்தின் பேரில் வீட்டின் உரிமையாளரான ஜாயா நகர் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகவும் சந்தேகநபரின் வீட்டில் 54 டைனமைட் குச்சிகளையும் அதற்கான 50 மருந்துகளையும் பொதியிட்டு மறைத்து வைத்திருந்த நிலையில் கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பாடசாலை கல்விசாரா சிற்றூழியர்களுக்கு பதவி, சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை

## கல்விசாரா அரச பொதுச்சேவை ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டு

(காரைதீவு செய்தியாளர்)

கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் கடந்த காலங்களில் பாடசாலை பௌதீக வளங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக பாடசாலைகளில் கல்விசாரா சிற்றூழியர் சேவையில் பாடசாலைப் பணியாளர், காவலாளி, சுகாதாரத் தொழிலாளர், நூலகப் பணியாளர், உதவியாளர், ஆய்வுகூடப் பணியாளர், விடுதிக்காப்பாளர் மற்றும் விடுதி உதவியாளர் எனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அரசசேவையில் இணைக்கப்பட்டு சம்பள அளவுத்திட்டமும் வரையறுக்கப்பட்ட நிலையில், பல வருடகாலமாக சேவையாற்றிய நூலக உதவியாளர்களுக்கு பதவியுயர்வு மற்றும் சம்பள உயர்வுகள் என பல வருடங்களாக வழங்கப்படவில்லை என சிற்றூழியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும், ஒரே அடிப்படையில் நூலக உதவியாளர் மற்றும் ஆய்வுகூட உதவியாளர் பதவிகளுக்காக உள்வாங்கப்பட்டு ஒரே அடிப்படையில் சம்பளம் பெற்றுவந்த நிலையில், கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் 2014ஆம் ஆண்டு புதிய சேவைப்பிரமாணம் குறிப்புக்கமைவாக நூலக உதவியாளர் சேவையினரை மாத்திரம் புறக்கணித்துவிட்டு ஆய்வுகூட உதவியாளர் சேவையில் உள்ளவர்களுக்கு தொழில்நுட்பம் சாரா முகாமை உதவியாளர் சேவையில் உள்ளீர்த்து அதற்கான சம்பள அளவுத்திட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் நூலக உதவியாளர் சேவையில் இருப்பவர்கள் மிகவும் மனவேதனை அடைவதாகத் தெரிவித்துள்ளனர். அரச தொழில் சேவை பிரமாணத்தின் அடிப்படையில் அரசசேவை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட நியமன அரசசேவையில் வினைத்திறன் தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சை சேவைக்கால அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, நூலக உதவியாளர்களை தொழில்நுட்பம் சாரா முகாமை உதவியாளர் சேவையில் உள்ளீர்த்து பதவியுயர்வு, சம்பள உயர்வு போன்ற குறித்த விடயங்களில் பொறுப்பு வாய்ந்த கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்விப்பணிப்பாளர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அரச பொதுச்சேவை ஊழியர் சங்கம் மற்றும் கிழக்கு மாகாண பாடசாலை கல்விசாரா ஊழியர் ஒன்றியம் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

உலக செய்திகள்

# ஆர்.ஆர்.ஆர். பட வில்லன் காலமானார்



'ஆர்ஆர்ஆர்' திரைப்படத்தில் பிரிட்டிஷ் அதிகாரியாக நடித்த ரே ஸ்டீவன்சன் (வயது 58) காலமானார்.

அயர்லாந்தைச் சேர்ந்த ரே ஸ்டீவன்சன் பல்வேறு ஹொலிவுட் திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்றவர்.

ராஜமௌலி இயக்கத்தில் ராம் சரண், ஜூனியர் என்.டி.ஆர். நடிப்பில் வெளியான படம் 'ஆர்ஆர்ஆர்'. இப்படம் உலகம் முழுவதும் கடந்த ஆண்டு மார்ச் 25ஆம் திகதி வெளியானது. தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியான இப்படம் நல்ல விமர்சனங்களைப்பெற்று 1,000 கோடி ரூபாவுக்கும் மேல் வசூல் சாதனையும் நிகழ்த்தியது.

இந்தத் திரைப்படத்தில் இடம்பெற்ற 'நாட்டு நாட்டு' பாடல் ஒஸ்கர் மற்றும் கோல்டன் குளோப் விருதுகளை வென்று சாதனை படைத்தது. இதனிடையே, ஆர்ஆர்ஆர் திரைப்படத்தில் வில்லனாக ராய் ஸ்டீவன்சன் (வயது 58) நடித்திருந்தார். அயர்லாந்தில் லிஸ்பர்ன் நகரில் 1964ஆம் ஆண்டு பிறந்த ரோ ஸ்டீவன்சன் ஆர்ஆர்ஆர். திரைப்படத்தில் மிகவும் கொடூரமான பிரிட்டிஷ் அதிகாரி ஸ்கொட் துரையாக நடித்து ரசிகர்களை ஈர்த்தவர்.

ஸ்டீவன்சன் உயிரிழந்த சம்பவம் அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவரது திடீர் மரணத்திற்கு பிரபலங்கள், திரைத்துறையினர், ரசிகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். ரே ஸ்டீவன்சன் தங்களது இதயத்தில் என்னென்றும் ஸ்காட் துரை கதாபாத்திரமாக நிலைத்திருப்பார் என்று ஆர்ஆர்ஆர் படக்குழு இரங்கல் தெரிவித்துள்ளது.

# உக்ரைன் மீது தொடர் ஏவுகணைத் தாக்குதல்: 5 கண்காணிப்பு நிலைகளை அழித்த ரஷ்யா



உக்ரைன் மீது தொடர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி அதன் 5 கண்காணிப்பு நிலைகளை ரஷ்யா அழித்துள்ளது.

நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2022 பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. ரஷ்ய தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரான கார்கீவ், துறைமுக நகரான மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன் மில்லியன் கணக்கான உக்ரைனியர்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறி அண்டைநாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். மேற்குலக நாடுகளின் ஆயுத உதவியால் உக்ரைன் ரஷ்யாவை எதிர்த்து நிற்கிறது. இந்தப் போர் இன்று 455ஆவது நாளாகவும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

சர்வதேச அளவில் பொருளாதார பாதிப்புகள் ஏற்படுவதால் போரை நிறுத்தும்படி பல நாடுகள் வலியுறுத்தின. இருப்பினும், போர் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதில் இரு தரப்பினரும் மாறிமாறி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் ரஷ்ய ஏவுகணைகள் மற்றும் தாங்கி எதிர்ப்புக் குழுவினர் குப்யான்ஸ்க் பகுதியிலுள்ள 5 போர் கண்காணிப்பு நிலைகளை அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஸ்புட்னிக் தெரிவித்தார்.

## வட்ஸ்அப்பில் பகிரப்பட்ட செய்தியை 15 நிமிடங்களுக்குள் திருத்திவிடலாம்

வட்ஸ்அப் செயலியை பயன்படுத்துவோர் எண்ணிக்கை உலகளவில் அதிகரித்துள்ளது. அதன் மூலம் பல்வேறு செய்திகள் பகிரப்பட்டு வருகின்றன. இந்தச் செய்திகளை வட்ஸ்அப்பில் அனுப்பி விட்டால் திருத்தம் செய்ய இயலாது. அதை அழித்துவிட்டு புதிய செய்தியை அனுப்ப முடியும். இப்போது அனுப்பிய செய்தியை திருத்தம் செய்ய வட்ஸ்அப் புதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. செய்தி அனுப்பிய 15 நிமிடங்கள் வரை அதைத் திருத்தம் (எடிட்) செய்யலாம்.

# கயானா பாடசாலை விடுதியில் தீ: 20 மாணவர்கள் உடல்கருகி பலி



கயானாவில், பாடசாலை விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தென் அமெரிக்க நாடான கயானாவின் மஹ்தியா பகுதியிலுள்ள பாடசாலையொன்றின் மாணவர் விடுதியின் படுக்கை அறையில் ஞாயிற்றுகிழமை நள்ளிரவில் திடீரெள தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால், அங்கு தங்கியிருந்த மாணவர்கள் பலர் தீப்பிடித்த அறையில் சிக்கிக் கொண்டுள்ளனர். தீக்காயங்களுடன் பலர் வெளியே குதித்து உயிர்தப்பிய நிலையில், மாணவ-மாணவிகள் உட்பட 20 பேர் தீயில் கருகி உயிரிழந்துள்ளனர்.

# உடல்முழுவதும் இரத்தம்;கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு வந்த பெண்ணால் பரபரப்பு



கேன்ஸ் திரைப்பட விழாவில் உக்ரேனிய தேசியக் கொடி நிறத்தில் உடையணிந்து வந்த பெண்ணொருவர் திடீரென போலி இரத்தத்தை உடல் முழுவதும் ஊற்றிக்கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரான்ஸில் நடைபெற்று வரும் 76ஆவது கேன்ஸ் திரைப்பட விழாவில் உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பில் உக்ரைனுக்கு ஆதரவளிக்கும் விதமாக விழாவின்போது உக்ரேனிய தேசியக் கொடி நிறத்தில் உடையணிந்து ரெட் கார்ப்பெட்டில் வந்த பெண்ணொருவர், திடீரென ஆடைக்குள் மறைத்துவைத்திருந்த இரத்த நிறத்திலான திரவத்தை உடலில் ஊற்ற ஆரம்பித்தார்.

இதனால் அங்கு பரபரப்பு நிலவிய நிலையில், விரைந்துசெயற்பட்ட காவலாளிகள் அப்பெண்ணை வலுக்கட்டாயமாக வெளியேற்றியுள்ளனர்.

கேன்ஸ் திரைப்பட விழாவில் இயக்குநர் தியரி ஃப்ரீமாக்ஸ் கடந்த வாரம் பேசும் போது உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்தார். இதேபோன்று திரைப்பட விழாவின் தொடக்க நிகழ்வில் பிரான்ஸ் நடிகை கேத்ரின் டேனியோ உக்ரைன் கவிஞர் லெஸ்யா உக்ரைன்கா எழுதிய ஹோப் என்ற கவிதையை வாசித்து போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவில் திடீரென லொறியில் பயணித்த ராகுல்





காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி நேற்று முன்தினம் இரவு திடீரென்று தனது காரை நிறுத்திவிட்டு லொறியில் பயணித்த வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

அரியானா மாநிலம், முர்தால் நகருக்குச் சென்ற ராகுல் காந்தி, அங்கிருந்து அம்பாலா நகருக்கு லொறியில் பயணம் செய்தார். லொறி ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களுடன் கலந்துரையாடிய படி ராகுல் காந்தி பயணம் செய்தார். இது குறித்த புகைப்படங்களை வெளியிட்ட காங்கிரஸ் கட்சி, லொறி ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் படும் துயரங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ராகுல் காந்தி கேட்டறிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது திட்டமிட்ட ஒரு பயணம் இல்லை. திடீரென்று ஏற்பட்ட பயணம் எனக் காங்கிரஸ் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் காங்கிரஸ் முன்னாள் எம்.பி ராகுல் பாரத் ஜோடோ யாத்திரை என்ற பெயரில் கன்னியாகுமரி முதல் ஜம்மு காஷ்மீர் வரை நடைபயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்து பிரச்சினைகளை கேட்டறிந்தார். அப்போது நடைபயணத்தில் மக்களுடன் செல்பி எடுத்துக்கொள்ளுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டார்.

அதேபோல் டில்லியிலுள்ள சந்தைப் பகுதிகளுக்குச் சென்று மக்களோடு இணைந்து சாலையோர உணவு சாப்பிட்டது, டில்லி பல்கலைக்கழக விடுதியில் மாணவர்களுடன் இணைந்து உரையாடியது என சமீபகாலமாக அடிக்கடி பல்வேறு தரப்பு மக்களை ராகுல் காந்தி நேரில் சந்தித்து உரையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

TATA IPL

**இன்றைய போட்டி**

**எலிமினேட்டர்**

**லக்னோ எதிர் மும்பை**

**நேரம் - இரவு 7.30**

**இடம் - சென்னை**

# எல்.பி.எல். 2023; நேரடி ஒப்பந்தம் செய்யப்பட்ட வீரர்களின் விபரம்



இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் 4ஆவது தடவையாக நடைபெறவுள்ள லங்கா ப்ரீமியர் லீக் தொடருக்கான ஏலம் எதிர்வரும் ஜூன் 11ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள நிலையில், ஏலத்துக்கு முன்னர் நேரடியாக ஒப்பந்தம் செய்யப்பட்ட வீரர்களின் விபரங்கள் நேற்று வெளியானது.

அணிகள் வெளியிட்டுள்ள வீரர்களின் விபரங்களின் படி பாபர் அஸாம் (கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்), டேவிட் மில்லர் (ஜப்னா கிங்ஸ்), மெதிவ் வேட் (தம்புள்ள ஓரா), சகீப் அல் ஹசன் (கோல் கிளேடியேட்டர்ஸ்) மற்றும் டெப்ரைஷ் சம்ஷி (கண்டி பல்கோன்ஸ்) போன்ற முன்னணி வெளிநாட்டு வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

**டேவிட் மில்லர், திசர பெரேரா, மகேஷ் தீக்ஷன – யாழ்ப்பாணம்**

**பாபர் அஸாம், மதீஷ பத்திரன, சாமிக்க கருணாரத்ன- கொழும்பு**

**மேத்யூ வேட், குசல் மெண்டிஸ், அவிஷ்க பெர்னாண்டோ – தம்புள்ள**

**ஷாகிப் அல் ஹசன், தசுன் ஷானக, பானுக ராஜபக்ஷ – காலி**

**தப்ரைஸ் ஷம்சி, வனிந்து ஹசரங்க, ஏஞ்சலோ மேத்யூஸ் – கண்டி**

# உலக தரவரிசையில் முதலிடம் பிடித்து சாதனை படைத்த இந்திய வீரர்



உலக ஈட்டி எறிதல் வீரர்கள் தரவரிசையில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக்கில் இந்தியாவிற்கு ஈட்டி எறிதலில் தங்கம் வென்று கொடுத்த நீரஜ் சோப்ரா, ஒலிம்பிக்கில் இந்தியாவிற்கு தங்கம் வென்று கொடுத்த முதல் தடகள வீரர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரராவார். இந்நிலையில், ஈட்டி எறிதல் வீரர்கள் தரவரிசையில் முதலிடம் பிடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

**ஈட்டி எறிதல் வீரர்கள் தரவரிசை:**

**1. நீரஜ் சோப்ரா (இந்தியா) - 1,455 புள்ளிகள்**

**2. ஆண்டர்சன் பீட்டர்ஸ் (கிறேனடா) - 1,433 புள்ளிகள்**

**3. ஜாகூப் வத்லேஜ் (செக் குடியரசு) - 1,416 புள்ளிகள்**

**4. ஜூலியன் வெபர் (ஜேர்மனி) - 1,385 புள்ளிகள்**

**5. அர்ஷத் நதீம் (பாகிஸ்தான்)- 1,306 புள்ளிகள்**

# குவாட்ரேங்கில் கோல்ப் சம்பியன் தொடர் இலங்கை விமானப்படைவசம்





இலங்கை விமானப்படை ஈகிள் கோல்ப் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு S மொபிடெல் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற குவாட்ரேங்கில் கோல்ப் தொடரில் பங்குபற்றி வெற்றியீட்டிய ஆண் மற்றும் பெண் போட்டியாளர்களுக்கான கிண்ணங்கள் மற்றும் சான்றிதல்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் பங்கேற்பில் சீனக்குடா விமானப்படைத் தளத்தில் அமைந்துள்ள ஈகிள் கோல்ப் அமைப்பில் இடம்பெற்றது .

இந்தத் தொடரில் இலங்கையின் முன்னணி கோல்ப் கழகங்களான விமானப்படை ஈகிள் கோல்ப் கழகம், றோயல் கொழும்பு கோல்ப் கழகம், விக்டோரியா கோல்ப் கழகம் மற்றும் நுவரெலியா கோல்ப் கழகம் சார்பாக வீரவீராங்கனைகள் பங்குபற்றினர். இந்தத் தொடரில் 325 போனஸ் புள்ளிகளைப்பெற்று இலங்கை விமானப்படை ஈகிள் கோல்ப் கழகம் ஒட்டுமொத்த தொடரின் வெற்றியையும் தன்வசப்படுத்தியது

இந்தத் தொடரில் சிறந்த குறுந்தூர ஷாட் வெற்றியாளராக விமானப்படை ஈகிள் கோல்ப் கழகத்தின் எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன அவர்களுக்கு வழங்கப்பட்டது. சிறந்த நெடுந்தூர ஷாட் வெற்றியாளராக நுவரெலியா கோல்ப் கழகத்தின் மைக்கேல் சத்தியசிவம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. சிறந்த குறுந்தூர ஷாட் மகளிர் பிரிவில் கிண்ணத்தை நுவரெலியா கோல்ப் கிளப்பின் பிரான் டி மெல் வென்றார் மற்றும் சிறந்த நெடுந்தூர ஷாட் வெற்றியாளராக ரோயல் கொழும்பு கோல்ப் கிளப்பின் டினுகா பொரலஸ்ஸ வென்றனர்.

இந்தப் போட்டிகளோடு இணைந்து சீனக்குடா ஈகிள் கோல்ப் மைதானத்தில் "The Commanders' Island Green" எனும் பெயரில் புதிய கோல்ப் மைதான தொகுதி விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

# கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி சம்பியனாக தெரிவு



**(நிந்தவூர் நிருபர்)**

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி 4 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டி கிழக்கு மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற நிந்தவூர் அல்-அஸ்றக் தேசிய பாடசாலையுடனான இறுதிப் போட்டியில் கல்முனை ஸாஹிரா சம்பியனானது. கல்முனை ஸாஹிரா அணி காலிறுதிப் போட்டியில் நற்பிட்டிமுனை லாபிர் வித்தியாலயத்தையும் அரை இறுதிப் போட்டியில் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியையும் வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7